Free Circulation Germany- England
மணி: 75 - ஓசை: 344 வைகாசி. May 2025

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
31 TH years IN EUROPE
Successful Publishing
பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் B.F.A




# மோடி மறந்த ‘தமிழர்கள்’

கொழும்பிலிருந்து... என்.அசோக்




உழைப்பின்றி
அமையாது
உலகு

The Fantasy Of Single Life

## தனித்து வாழ விரும்பும் இளைய தலைமுறை!



இதழ்: 344



## மலைத்தேன்

க. ஆதவன்






# அமெரிக்காவில் உள்ள சுதந்திரதேவி சிலையை விட 30 மீட்டர் உயரமான கருட விஷ்ணு சிலை!



தென்னை, நெல் வயல், கடல், மலை, என இயற்கை அழகு சுற்றுலாப் பணிகளை ஒருபுறம் பாலி கவர்ந்து இழுக்க, மறுபுறம் மனிதன் வடித்த சிலைகள் சுற்றுலா பயணிகளைக் கட்டிப்போடு கிறது. பாலி விமான நிலையத்தில் (Denpasar International Airport) இறங்கியதும் மலை உச்சியில், மலையின் கால்வாசி உயரத்தில் தெரியும் ( Garuda Wisnu Kencana) கருடன் விஸ்ணு சிலையே முதலில் வரவேற்கும்.

கடவுள், கதைகள், உண்மை பொய் என்பதற்கு அப்பால் கற்களுக்கு உயிர் உண்டு என கலைஞர்கள் சொல்வது உண்மை என்பதனை சிற்பிகளின் கைவண்ணம் சொல்கிறது. நான் சொன்ன அந்த பிரம்மாண்டமான கருட விஷ்ணு சிலை இந்தோனேசியாவில் உள்ள பாலியில் கலாச்சார பூங்கா ஒன்றில் கருட விஷ்ணு கென்கானா என்ற பிரம்மாண்டமான சிலை அமைக்கப்பட்டுள்ளது. 20 கி.மீ அப்பால் இருந்து பார்த்தாலும் இச்சிலை தெரியும்.

புராணக்கதை ஒன்று இப்படிக் கூறுகிறது.

‘அடிமையாக இருந்த தனது தாயை விடுவிப்ப தற்காக கருடன் தேவலோகத்தில் இருந்து அமிர் தத்தை கைப்பற்றினார்.

அப்போது அவர் தேவர்களுடனும் இந்திரனுடம் போரிடும் சூழல் ஏற்பட்டது. ஆனாலும் அவரை எவராலும் வெற்றி கொள்ள முடியவில்லை. ஏனெ னில் அவர் பறவைகளின் ராஜாவாக இருக்க பல்வேறு ரிஷிகளின் யாகத்தில் உருவாக்கப்பட்டவர்.

அப்படிப்பட்ட சக்தி படைத்த கருடனை மகாவிஷ்ணு தன்னுடைய வாகனமாக ஏற்றுக் கொண்டு அவரின் மீது பயணம் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டார். ‘ இந்த கதையை நினைவு கூறும் வகையில் பாலியில் பிரம்மாண்டமான கருடன் மீது மகாவிஷ்ணு வீற்றி ருப்பது போன்ற பிரம்மாண்டமான சிற்பம் வடிவமைக் கப்பட்டுள்ளது. கதையின் உண்மைத்தன்மையை இங்கு ஆராய வரவில்லை. பிரமாண்டமான சிலை பற்றியே பார்ப்போம்.

46 மீட்டர் உயரம் கொண்ட பீடத் துடன் அமைந்த அந்த சிலையின் மொத்த உயரம் 122 மீட்டர் ஆகும். இந்தோனேஷியாவின் மிக உயரமான சிலையாக இது திகழ்கிறது.



மாதவி

20 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 344



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# மோடி மறந்த 'தமிழர்கள்'

## புதுடில்லியிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் ஈழத்தமிழர் முன்னுள்ள சவாலும்

கொழும்பிலிருந்து...
என்.அசோக்

மூன்று நாள் பயணமாக இலங்கைக்கு அண்மையில் வந்திருந்த இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் இலங்கை அரசியலில் பெரும் பேசுபொருளாக மாறியிருக்கிறது. ஒருபக்கம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் தென்னிலங்கையின் கொதிநிலை அதிகரித்திருக்கும் அதேவேளை, மறுபுறம் மோடியின் இந்த விஜயத்தில் சிறுபான்மை மக்கள் தொடர்பில் குறிப்பாக ஈழத்தமிழர்கள் பக்கம் அவருடைய சாய்வு ஒரு துளிகூட இருக்கவில்லை என்பது ஈழத்தமிழர்கள் மத்தியிலும் ஈழத்தமிழர் விடயங்களை கையாளும் செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் பெரும் அதிருப்தியையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.



இந்தியாவை மிகத்தீவிரமாக எதிர்த்துவந்த ஜே.வி.பி. (தேசிய மக்கள் சக்தி) ஆட்சி பீடம் ஏறிய கையோடு இந்தியாவை அனுசரித்து சென்றால் மாத்திரமே தாங்கள் நிம்மதியாக நீண்ட காலத்துக்கு ஆட்சி கட்டிலில் இருக்க முடியும் என்ற வரலாற்று பாடத்தை (கோத்தாபாயவுக்கு ஏற்பட்ட நிலைமையை கருத்தில்கொண்டு) கையிலெடுத்துக் கொண்டு இந்தியாவை அரவணைத்து செல்லும் கொள்கையை கையிலெடுத்திருக்கிறது. இலங்கையில் நீண்டகாலமாக இழுபறியிலிருந்த சில திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பயன்படுத்தவேண்டுமென்ற இந்தியாவின் எதிர்பார்ப்புக்கு அனுரவின் அனுசரிப்பு இந்தியாவுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கிறது. விருப்பமில்லாவிட்டாலும் வெளியில் சிரித்த முகத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டிய நிலையில் அனுர அரசு மோடியின் தாளத்துக்கு ஆடவேண்டிய சூழலுக்குள் அகப்பட்டிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.அதனைதான் அண்மைய மோடியின் விஜயத்தில் இலங்கை ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்களின் பின்புலம்.



மறுபுறம்,இலங்கை செய்யும் உதவிகளுக்கு பிரதியுபகாரமாக இந்தியாவும் இலங்கைக்கு ஏதாவது செய்யவேண்டும் என்பதற்கிணங்க அனுர அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க 13 ஆவது திருத்த சட்டம் பற்றியோ ஈழத்தமிழர் விவகாரம் பற்றியோ மூச்சுக்கூட விடாமல் மோடி இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருக்கிறார். உண்மையில் மோடியின் அல்லது புதுடில்லியின் இந்த மாற்றத்துக்கு என்ன காரணம்? இதற்கு பின்னால் உள்ள நிகழ்ச்சி நிரல் என்ன? இந்தியாவின் போக்கில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்துக்கு பின்னால் இருக்கின்ற எதிர்கால அரசியல் போக்கு என்ன? என்பது தொடர்பில் ஈழத்தமிழர்களும் அரசியல்வாதிகளும் சமய-சமூக புத்திஜீவிகளும் ஈழத்தமிழர் விவகாரத்தை கையாளும் செயற்பாட்டாளர்களும் ஆழ ஊன்றி ஆராய்வது அவசியமாகும்.

காரணம் இலங்கைக்கு இந்தியா என்ற நாடு எவ்வளவு முக்கியமோ அதேயளவுக்கு ஈழத்தமிழருக்கும் இந்தியா முக்கியமானதொரு நாடாகும்.இலங்கைக்கு ஒரு பிரச்சினையாக இருந்தாலும் ஈழத்தமிழருக்கு ஒரு பிரச்சினையாக இருந்தாலும் முதலில் இந்தியாவிடம் தான் செல்லமுடியும் என்ற எழுதப்படாத விதி நீண்ட வரலாற்றை கொண்டது. அதேபோல்,இந்தியாவை மீறி ஒரு நாடு இலங்கையிலோ அல்லது ஈழத்தமிழர் விடயத்திலோ மூக்கை நுழைக்கமுடியாது என்பது வரலாறு.

இந்த பின்னணியிலேயே மோடியின் இலங்கை விஜயத்தை பார்க்கவேண்டியிருக்கிறது.

29 ஆம் பக்கம் பார்க்க...



# மலைக்க வைத்த மலையகம்





க.ஆதவன்

க.ஆதவன் (ஆதவன் கதிரேசர் பிள்ளை) என்னும் பெயர் இலக்கிய உலகில், குறி ப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமான பெயர்களிலொன்று. பேராதனைப்பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் யாழ் பல்கலைக் கழகத்தில் மெய்யியற் துறையில் நிரந்தர விரிவுரையாளராக , 1981-1983 காலகட்டத்தில் பணி புரிந்தவர். கவிதை, நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், சினிமா, தத்துவம் எனப்பல்துறைகளிலும் தன் பங்களிப்பினைச் செய்து வருபவர். 'தீர்த்தக்கரை', 'புதுசு' எனச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணைய இதழ்களில் இவரது பல்வகைப்பட்ட படைப்புகள் வெளியாகியுள்ளன. நோர்வேயிலிருந்து வெளியான 'சுவடுகள் 'சஞ்சிகையில் வெளியான இவரது 'மண் மனம்' புகலிடத் தமிழ் இலக்கியத்தில் வெளியான முக்கியமான நாவல்களிலொன்று. தத்துவம் பற்றிய இவரது கருத்துகளைத் தாங்கிய 'பதிவுகள்' இணைய இதழில் வெளிவந்த 'மெய்யியல் கற்றல் கற்பித்தல்' என்னும் தொடரும் முக்கியமான இவரது பங்களி ப்புகளிலொன்று.

அவர் உங்களோடு பேசுகிறார்...

நீங்கள் ஒரு கோப்பை தேநீர் ஆற அமர இருந்து அழகாக பருகவும், பல கோணங்களில் படம் எடுத்து மகிழவும், மலையகத்தில் தொழிலாளிகள் படும்பாடு கண்டு திகைத்தேன்.

ஒரு நாள் அவர்களின் முதுகில் உள்ள





கொழுந்துக்கூடையின் சுமையை விட குடும்பச்சுமையை நேரில் பார்த்து மனம் நொந்தேன்.

நான் தினம் புகைக்கும் ஒரு நாளுக்கான சிகரட் காசை விட அவர்களது ஒரு நாள் கூலி குறைவானது.

ஒரு தொழிலாளி க்கு அன்று ஒருநாள்



புகையைத்துறந்து அந்த காசைக் கொடுத்தேன்.

எனக்கும் ஒருநாள் ஆகினும் கர்ணன் ஆக ஆசைதான். அந்த ஒருநாள் கர்ணனும் என் செயலை ஆமோதித்தான்,

இத்தனை துயரங்கள் மலிந்த கூலி வேலைகள் மத்தியிலும், கூத்தும், கும்மாளமும் என கவலைமறந்து கலை வாழ்வு வாழும் அம்மனிதர்களையும், அந்த மலைகளையும் பார்த்து மலைத்தேன்.

அதனைச் சொட்டுச் சொட்டா உங்களுடன் பகிர்கின்றேன்.

200 ஆண்டுகளாய் அடிமையாய் வாழ்ந்த நிலத்தில்.. 25 ஆண்டுகளின் பின் கால் பதிக்கும் ஒரு சிறு மானிடன் நான்.

மூதாதயர் வழி வந்த பழிச்சொல்
தோட்டக்காட்டான்.
முகத்திடை கோபம் வருகிறது.
வடக்கத்தியான்
எனும் போது..
என் மனம் வெடித்துச் சிதறுகிறது.

கொழுந்து கிள்ளப் போகிற ஒரு தாயை நினைக்கிறேன்.

மணியொன்று டான் டான் என ஒலிக்கக் கேட்டாள். மடிமீது தவழ்ந்திருந்த மகவைப் போட்டாள்-

கவிஞர் கதிரேசபிள்ளை அன்றெழுதியது.

அப்பா அந்த உழைப்பாளிப் பெண்களைப் பார்த்திருக்கிறார். மகவைப் போட்டாள் எனுஞ் சொல் நெஞ்சள்ளுகிறது.

அப்பாவிற்கு,முதல் அப்போயின் மென்ற் சீறீபாதக்கல்லூரி ஹற்றன்.

கவி மனசு.

அங்ஙனம் எழுதியது. நான் அதே ஹற்றனில் நிற்கிறேன். இப்போ.

சிறீபாதவில்... யூனிபோம் போட்டபடி மாணவச் செல்வங்களைப் பார்க்கிறேன்.

மனதினுள் இனம் புரியாத கீதம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

இங்கே காண்பது மரம் ஏறி பழம் புடுங்கிய ஆச்சியின் பூட்டீ.

குடுகுடுவென்று பள்ளத்தாக்கில் ஓடுகிறது அந்த நீரோடை போல.

பூட்டியையும் பூட்டியையும் பூட்டி வைப்பதே பெரும் பாடு.

ஒன்று மரமேறும் மற்றது பள்ளமேகும்.

வாழ்வின் தத்துவம் மெல்லெனப் புரிந்ததெனக்கு.

அதிசய மனுஷி.

86 வயசு. ஒரு பொழுதும் வைத்தியரை நாடவில்லை.

அதிசய மனுஷி. 86 வயசு.

மாமரத்திலேறி என்னைப் பிரமிக்க வைத்த என் பேத்தி. மலையகப் பயணத்தில்.. கண்டுகொண்ட என் தாய்.

என் மாணவி ப்ரியாவின் பேத்தி.

200 ஆண்டுகள் வாழுவாளாக்கும்.

ஏன் இந்த மக்களும் மரமும் நீரலைகளும் மகிழ்வாய் இல்லையெனும் கேள்வி நெஞ்சில் பாரமாய் இறங்கிற்று.

நவகாலனித்துவத்தின் வெளிப்பாடு என்பார் மாக்சியர்கள்.

எனக்கேனோ அக் கருத்தில் உடன்பாடில்லை.

இந்த நிலத்திற்கும் இம் மக்களுக்கும்,
இச்சிறு கொழுந்துகளுக்கும் ஏதோ நிகழ்ந்திருக்கிறது.

-டேய். இதில் நிப்பாட்டு-
போனேன்.
மரத்தின் கீழ் தியானம் செய்தேன்.
குளித்தேன்.
இன்னமும் கேள்விக்குப் பதிலில்லை
தொடர்ந்து பேசுவோம் ...








# தள்ளிப்போகும் திருமணங்களும் தடுமாறும் பெற்றோரும்

தெற்காசியப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு உரிய வயதில் திருமணம் செய்து வைக்க வேண்டியது தமது மிகப்பெரிய பொறுப்பு என்று நம்புகிறார்கள். இது அவர்கள் மிக நீண்டகாலமாக கண்டிப்புடன் பேணப்பட்டு வந்த வாழ்க்கைமுறை. இந்த நோக்கத்துக்காகவே தமது வாழ்நாள் சம்பாத்தியத்தைச் சேமித்துவைத்தும் அதன்பொருட்டு தமது சொந்த விருப்புக்களைப் புறந்தள்ளியும் வாழப் பழக்கப்பட்டு விட்டவர்கள். இந்தப் பாரம்பரியப் பின்னணியில் வந்தவர்களின் சந்ததியினர் இன்று பொருளாதாரத்தில் முன்னேற்ற மடைந்துள்ள மேற்குலக நாடுகளில் புலம்பெயர் வாழ்வைத் தேர்ந்தெடுத்த பின்னர் தமது பிள்ளைகளின் திருமணம் தொடர்பாகப் பல்வேறுவகையான ஏமாற்றங்களையும் மன உளைச்சல்களையும் சந்திக்க நேரிடுகின்றது. தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்து, அவர்களும் தமக்கென ஒரு குடும்பத்தை உருவாக்குவதைப் பார்க்கவேண்டும் என்ற தமது ஆசையை உரியகாலத்தில் நிறைவேற்றுவதில் இங்குள்ள பெற்றோருக்குப் பல தடைகள் உள்ளன.

## தலைமுறை இடைவெளி

ஒரு இளம்பெண்ணுக்கோ ஆணுக்கோ திருமணம் செய்யவேண்டிய வயது வந்துவிட்டது என்பதை உணர்ந்தவுடன் அவர்களின் பெற்றோர் மட்டுமன்றி மாமன் மாமி பெரியப்பா சித்தப்பா அண்ணன் தம்பி மற்றும் உறவினர் நண்பர் என்று பல தரப்பட்ட சொந்த பந்தங்களும் பொருத்தமான இணையைத் தேடிக் களத்தில் இறங்கிவிடுவர். இவர்களுடன் கூடவே ஊர் ஊராகத் திரிந்து தமக்குத் தெரிந்த மணமகனுக்கு அல்லது மணமகளுக்குப் பொருந்தக்கூடிய இளைஞர் யுவதிகளைக் கண்டறிந்து சாதகக் குறிப்புகளுடன் வீடு வீடாக ஏறி இறங்கும் கல்யாணத்தரகர்களுக்கும் ஊரில் பஞ்சம் இல்லை. பெரும்பாலும் மாப்பிள்ளை வீட்டாரும் பெண்வீட்டாரும் ஏதோ ஒரு வழியில் ஒருவரை ஒருவர் அறிந்து வைத்திருக்க வாய்ப்புகள் அதிகம்.

அப்போதெல்லாம் காதல் திருமணமே இல்லை என்று சொல்வதற்கில்லை. இருந்தது. ஆனால் அபூர்வம்.

> **ஞாயும் யாயும் யாராகியரோ**
> **எந்தையும் நிந்தையும் எம்முறைக் கேளிர்**
> **அன்புடை நெஞ்சம் தாம் கலந்ததுவே**



என்னும் சங்கத்தமிழ்ப் பாடலைப் போன்று கண்டவுடன் காதல் கொள்வோர் மிக அரிது. அதுவும் அக்காதல் திருமணத்தில் முடிவதும் அபூர்வம்.

பெற்றோர் பேசிமுடித்துவைக்கும் கல்யாணமே பெருவழக்காக இருந்த அக்காலப்பகுதியில் இளம்பெண்கள் இப்போது போல் தமது துணையைத் தாமே தேடிப் பெற்றுக்கொள்ளவேண்டிய சங்கடமான சூழலில் இருந்து தப்பிவிட்டார்கள் என்றுதான் கூறவேண்டும். ஒரு சிலருக்குத் தாம் விரும்பிய ஆணையோ பெண்ணையோ அடைய முடியதுபோன ஏக்கம் உள்மனதில் இருக்கத்தான் செய்யும். எனினும் திருமணம் முற்றானதும் பழைய ஆசாபாசங்கள் எல்லாம் மறந்து போய்விடும். அதெல்லாம் ஒரு பெரியவிடயமாகவே இருக்காது. சில நேரங்களில் இதற்காகவா இவ்வளவு நாள் சங்கடப்பட்டோம் என்றுகூட எண்ணத் தோன்றும்.

இன்றைய காலகட்டத்தில் இவை எல்லாமே மாறிவிட்டன. திருமணம் செய்து கொள்வது என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள தனிப்பட்ட உரிமையும் தெரிவும் ஆகும் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் துணிந்து விட்டார்கள். திருமண வயதுக்கு வந்துவிட்டவர்கள் தாமாகவே தமக்குப் பொருத்தமான துணையை எப்போதும் எங்கேயும் தேடிப் பெற்றுக் கொள்ளலாம் என்னும் நிலைதான் இன்று உள்ளது. மனதுக்கு பிடித்த துணை கிடைத்தால் திருமணம் கிடைக்காவிடில் துறவறம் என்றாகிவிட்டது.

இந்த நிலை இன்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே மேலை நாடுகளில் உருவாகிவிட்டது. இவர்களுட் பலர் குறிப்பாக ஆண்கள் தமது வருங்காலத் துணையுடன் மிகமிக நெருங்கிப் பழகிய பின்னரேயே திருமணம் செய்வோம் என்று அடம்பிடிப்பார்கள். பெண் சம்மதிக்காவிட்டால் தொடர்பு முறிந்துவிடும். இன்றைய தலைமுறை இவற்றையெல்லாம் மெல்ல மெல்ல அறிந்து கொண்டு வருகின்றது. பெற்றோரின் எதிர்பார்ப்புகளுக்கும் வெளி உலக நிதர்சனத்துக்கும் இடையில் நின்று போராடி வருகின்றார்கள் இன்றைய இளைய தலைமுறையினர்.



முனைவர்
பால. சிவகடாட்சம்
(கனடா)

பெற்றோர் அல்லது உறவினர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் அறியப்படாத அல்லது சாதாரணமான ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படாத புலம்பெயர் சூழலில் வளரும் இரண்டாவது தலைமுறை, தங்கள் பெற்றோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணையை மறுப்பு ஏதும் இன்றி ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இந்தத் தலைமுறை இடைவெளிக்கு அப்பால், மேற்குலக நாடுகளில் வாழும் தெற்காசிய நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட பெற்றோர்களின் பிள்ளைகள் தமது திருமணத்தைப் பின்போடுவதற்கு வேறும் பல காரணிகள் உள்ளன.

## சமூக ஊடகங்கள்

இளந்தலைமுறையினர் தங்கள் பெற்றோரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக மட்டும்

28 ஆம் பக்கம் பார்க்க...




SRI LANKA
12 ADULTS
13 NIGHTS 14 DAYS TOUR PACKAGE
WITHOUT
FLIGHT TICKET
1349 €
15 SEPTEMBER
START
1.Colombo Fairway Colombo
2. Sigiriya Sigiriya Village
3.Sigiriya Sigiriya Village
4. Kandy Mount Randholee
5. Ella/ Haputale Morning Dew or similar
6. Ella/ Haputale Morning Dew or similar
7.Yala Chaarya resort & spa
8. Yala Chaarya resort & spa
9.Bentota The Palms
10. Bentota The Palms
11. Bentota The Palms
12. Bentota The Palms
13. Bentota The Palms
14. 14 Departure
0234 2399032 | 0179 14 84892
INFO@LUCKY-FLY.DE | WWW.LUCKY-FLY.DE
Alleestr.38-40a im
Edeka- Center
44793 Bochum
Tel: 0234-2399032
Luckyfly

# டிரம்பிற்கு எதிராக உலகம்:




## அமெரிக்காவில் போராட்டம் ஐரோப்பாவில் எதிர்ப்பலை!

கடந்த மாதம் வாசிங்டனில் பல்லாயிரம் மக்கள் டிரம்பிற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஐந்து இலட்சம் மக்கள் அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலும் டிரம்பிற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றனர் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் கடுமையான வரி உயர்வு காரணமாக அமெரிக்காவின் பல நகரங்களில் 05/4/25 சனிக்கிழமை பெருமளவு மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

### அமெரிக்காவில் போராட்டம்:

அத்துடன் அமெரிக்க அதிபர் டிரம்ப் நாட்டை நிர்வகிக்கும் முறை குறித்து சீற்றமடைந்துள்ள மக்களே இந்த ஆர்ப்பாட்டங்களை பல மாநிலங்களிலும் முன்னெடுத்தனர். இதுவே டிரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அமெரிக்காவில் இடம்பெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்டங்கள் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களிலும் இடம்பெற்றதாக தெரிவித்துள்ள ஊடகங்கள், 1200 இடங்களில் டிரம்பிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெற்றன.

சர்வதேச அரங்கில் பாரிய வரிவிதிப்பதையும், அந்நாடுகளின் அரசியலில் தலையிட வேண்டாம் என்று இந்த ஆர்ப்பாட்டங்களை சிவில் உரிமை அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உட்பட 150க்கும் மேற்பட்ட அமைப்புகள்




வலியுறுத்தி இதில் கலந்துகொண்டன. அத்துடன் அமெரிக்காவில் வலுக்கட்டாயமாக அரசாங்க ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவது, சமூக பாதுகாப்பு நிர்வாக அலுவலகங்களை மூடுவது, குடியேற்றவாசிகளை நாடுகடத்துவது, சுகாதார பாதுகாப்பு திட்டங்களை குறைப்பது போன்ற டிரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கைகள் குறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பெரும் சீற்றத்தை வெளியிட்டனர்.சில ஊடகங்களின் கூற்றுப்படி வாசிங்டனிலும் புளோரிடாவிலும் மட்டும் சுமார் 50,000 மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த டிரம்ப் எதிர் ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு விதமான பதாகைகளை ஏந்தியிருந்தனர். ரஷ்யாவுடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கு டிரம்ப் நிர்வாகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசம் போட்டனர்.

### டிரம்பிற்கு எதிராக உலகம் :

இதே வேளை டிரம்பிற்கு எதிராக உலகமெங்கும் பல்வேறு காலகட்டங்களில் பல நாடுகளில் போராட்டங்கள் நடைபெற்றன. வாசிங்டனில் அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற நாளில் இருந்து அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளிலும் அவருக்கு எதிராக பல்வேறு கண்டன போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. டிரம்ப் அரசு புலம் பெயர்ந்தோரை கையாள மிகப் பெரிய நாடு கடத்தல் திட்டத்தை தொடங்கியது. இது அமெரிக்காவில் மட்டுமன்றி, உலகின் பல்வேறு நாடுகளிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

### ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பலை:

டிரம்பின் நிலைப்பாட்டை எதிர்த்து ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் பதாகைகளுடன் பேரணி நடத்தினர். டிரம்பின் குடியேற்ற கொள்கைகளை எதிர்த்து பாரிசில் பதாகைகளுடன் பேரணி நடத்தினர். அத்துடன் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டதற்கு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். குடியேற்று வாசிகள், பிறப்புரிமை, குடியுரிமை போன்றவற்றின் டிரம்பின் கொள்கைகளுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

மெக்சிகோவில் டொனால்ட் டிரம்பின் குடியேற்று நடவடிக்கைக்கு எதிராக எல்லை வெளியில் பாரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் போது மெக்சிகோ வளைகுடாவின் பெயரை அமெரிக்க வளைகுடா என்று மாற்றியதற்கு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

### பிலிப்பைன்ஸில் எதிர்ப்பு :

பிலிப்பைன்ஸில் அமெரிக்க ராணுவத்தை விரிவுப்படுத்துவதை கண்டித்து மணிலாவில் போராட்டங்கள் நடைபெற்றன.

20 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

# என்ரை ஆச்சி 02

பவர்கட் வந்தபிறகு வீட்டம்மா போனை நல்லா சார்ஜ் ஏத்தி வைக்க வேணும் டேற்றா தாராளமாப் போட்டு வைக்க வேணும் அப்பதான் அடாது பவர் கட் வந்தாலும் விடாது சீரியல் பாக்கலாம் எண்டுபோட்டு என்னைப் போய் டெற்றா போட்டுக்கொண்டுவா எண்டு துரத்தி விட்டா. சரி இனி அவ சொன்னாப் பேந் தென்ன பம்மிக்கொண்டு நிக்கேலுமே எண்டுபோட்டு வெள்ளவத்தையில ஒரு கடைக்குப் போய் டேற்றா போடவெண்டு நிக்க வண்டியும் குண்டியுமா யம்பரும் ரீ சேர்ட்டும் போட்ட ஒரு நடுத்தர வயதுக்காறர் அங்கை மாஸ்க்கை நாடியில இழுத்து விட்டபடி வாய்நிறைய வெத்திலையைச் சப்பிக்கொண்டே வந்தார்.

நான் அவரை ஒரு மாதிரி முறைச்சுப் பாக்க மாஸ்க்கை இழுத்து வாயை மூடினவர் கடைப்பெடியிட்டை அது இருக்கோ இது இருக்கோ எண்டு மாஸ்க்குக்கால எச்சில் பறக்க கேட்டுப்போட்டு கதவைத் திறந்து கொண்டு வெளியில போனார். வெளியில போய்க்கொஞ்ச நேரத்தில வாந்திபேதி வந்த எருமைமாடு சாணிபோடுறமாதிரி ஒரு சத்தம் வர எட்டிப்பாத்தா தெருவில ஆக்கள் நடந்து போற நடைபாதையில அவர் வெத்திலை எச்சிலைத் துப்பினார். எனக்கெண்டாக் கடும் கோபம் வந்திச்சு பேந்தும் எனக்கு வீட்டம்மால வாற கோவம் மாதிரியே காணாமப் போட்டுது ஏனெண்டால் அவரில ஒரு வாள்வெட்டுக்காறன்ரை சாயல் இருந்தது.

வெத்திலை போடுறகனபேர் உப்பிடித்தான் கண்ட கிண்ட இடங்களிலையும் துப்புங்கள். சில கறுமங்கள் ஓடுற பஸ்ஸிலை இருந்தே யன்னலுக்கால எட்டித் துப்புங்கள். எட்டிச் செவிட்டில விடவேணும் போல இருக்கும். வெத்திலை போடுறது நல்லம் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ. அதில கன விசேசங்கள் இருக்கெண்டுவா. ஒரு மனுசனுக்கு வாதம், பித்தம், கபம் இந்த மூண்டும் ஒழுங்கா இருந்தா ஒரு கோதாரியும் ஒருத்தருக்கும் வராது எண்டுவா. பாக்கு பித்தத்தையும் சுண்ணாம்பு வாதத்தையும் வெத்திலை கபத்தையும் கட்டுப்படுத்தும் எண்டுவா. அதிலும் வெத்திலை முட்டு நெஞ்சுச்சளி சுவாசப்பை நோயளுக்கு கைகண்ட மருந்து எண்டுவா. அதாலதான் முந்தி எங்கட ஆக்கள் சாப்பிட்ட பிறகு ஒரு வாய் வெத்திலை போடுறதை வழக்கமா வைச்சிருந்தவை.

ஆனா எதுகும் அளவோட இருக்க வேணும் எண்டு அப்பு சொல்லுறவர். ஆடு மாடு இலை குழை தின்னுறமாதிரி அதே வேலையா இருந்து வெத்திலை பாக்குச் சுண்ணாம்பு திண்டாப் பேந்து கான்சர் வந்து கண்ணை மூடவேணும் எண்டுவார். உப்பிடி அளவுக்கு மிஞ்சி வெத்திலை திண்ட எத்தினையோபேர் வாழ வயது இருந்தும் கான்சர் வந்து செத்தவை.முந்தி நல்லநாள் பெருநாள் எண்டில்லை வீடுவழியை ஆர் வந்தாலும் வெத்திலை குடுக்கிற ஒரு பழக்கம் இருந்தது. அதுக்காகவே வீடுகளிலை விறாந்தையில இருக்கிற வாங்கில வெத்திலைப்பெட்டியோ இல்லாட்டில் வெத்திலைத்தட்டமோ இருக்கும். ஆரும் போற இடத்தில வெத்திவைப்பெட்டியை இல்லாட்டில் தட்டத்தை நீட்டாட்டி ஆக்கள் கோவிக்கிற நிலைமையும் இருந்தது. அதுகும் வீட்டை வேலைக்கு வாற ஆக்களுக்கு கோப்பி தேத்தண்ணி சாப்பாட்டோட வெத்திலை போயிலையும் கட்டாயம் குடுக்க வேணும்.





எங்கட அப்பு ஆச்சி எப்பவும் சாப்பிட்ட உடனை வெத்திலை போடுவினம். அதிலும் இரவில படுக்கப்போக முந்தி கட்டாயம் வெத்திலை போடுவினம். அவையின்ரை அந்நியோன்னத்துக்கு உந்த வெத்திலை பாக்கும் ஒருகாரணமாய் இருக்க வேணும். அதிலும் ஆச்சி தலைவாசல் விறாந்தையில ஒரு காலை மடிச்சு வைச்சு மற்றக்காலை நீட்டி வைச்சு உரலுக்கை வெத்திலையையும் பாக்கையும் போட்டு டொக்கு டொக்கெண்டு இரும்பு உலக்கைத்துண்டால இடிக்கிறதிலை ஒரு ரிதம் இருக்கும். அதுகும் அவ அந்த உரலை இடது கையால மெல்லமாச்சுத்திச் சுத்தி வலது கையால இடிக்கிறதைப் பாக்க ஆசையா இருக்கும். இப்பிடி இடிச்ச பிறகு ஆச்சி இடிச்ச பாக்கு வெத்திலையை உள்ளங்கையில கொட்டிப் பேந்து ரெண்டாப் பிரிச்சு ஒரு பங்கை அப்புவுக்குக் குடுத்துப்போட்டு மற்றப்பங்கை தான் வாயிலை போட்டுக் குதப்புவா.

அப்புவும் ஆச்சியும் வெத்திலையைக் குதப்பிப் போட்டுத் துப்பிறதிலையும் ஒரு டிசிப்பிளின் இருக்கும். அதுகும் அப்பு வாயிலை ரெண்டு விரலைவைச்சுத் துப்பினார் எண்டால் வெத்திலைத்துப்பல் மூண்டடி தள்ளிப் போய் வேலி மட்டக்காலுக்கை விழும். பேந்து போய்க் காலால புழுதியைத் துப்பலுக்கு மேல சிலாவிப் போட்டு வருவார்.உந்த எல்லாத் திலையும் பாதிபாதியா இருக்கிற பண்புதான் பங்கிடுகிற பண்புதான் அப்பு ஆச்சி ரெண்டு பேரையும் சுகம் துக்கம் ரெண்டையும் பங்கு போட்டுக் குடும்பம் நடத்திற பழக்கத்தைக் குடுத்து அந்நியோன்னியமா இருக்க வைச்சுது. ஆச்சி தனிய அப்புவுக்கு எண்டில்லை இடைக்கிடை எங்களுக்கும் தன்னட்டை கதைக்க வாற பெண்டுகளுக்கும் கூட உந்த வெத்திலையை இடிச்சுத் தந்திருக்கிறா. உதால அயலட்டையுக்கையும் ஒரு பந்தம் பாசம் நெருக்கம் இருந்தது.



காரைக்கவி
கந்தையா
பத்மானந்தன்

இண்டைக்கு நாங்கள் ஆச்சி அப்புவின்ரை எத்தினையோ பழக்கவழக்கங்களை நாகரிகம் எண்ட பெயரிலை மறந்து போனம். அப்பிடி மறந்து போன விசயங்களில ஒண்டுதான் உந்த பாக்கு இல்லாட்டில் வெத்திலை உரலும் அதில இருந்து வாற அந்த டொக்கு...டொக்கு... சத்தமும்.




K.K.L.
Textilien Schmuck Haushaltsware
உங்கள் மனம்போல் தெரிவு செய்ய,
விதம் விதமான ஆடைகள் ,
இன்றே எம்மை நாடுங்கள்.
என்றும் புது வரவுகள்
Rheinische str.56 44137 Dormund | Tel: 0231 96 98 6610
https://m.facebook.com/ kkl.textillenschmuck



# லண்டன் நரிகளின் நகரம்

லண்டன் நகரத்தில் மத்திய நகர்ப்புறத்தில் நரிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகிறது. அவைகள் செழிப்பான வாழ்க்கை வாழுவதாக புள்ளி விபரங்கள் சொல்கின்றன. மதிப்பீடுகளின்படி, நகரத்தில் சுமார் 10,000 முதல் 15,000 நரிகள் உல்லாசமாக வாழ்கின்றன, உணவுக்காக அலைய வேண்டியதில்லை. குப்பைத் தொட்டிகளை கவிழ்த்து அவைகள் உணவுகளை தேடி உண்கின்றன. தோட்டங்கள் மற்றும் பூங்காக்களில் தங்குமிடம் தேடுவதன் மூலம் நகர வாழ்க்கைக்கு ஏற்றவாறு நரிகள் மாறிவிட்டன.

முதல் உலகப் போரின் முடிவில் இருந்து நரிகள் லண்டனில் வாழுகின்றன., மேலும் அவற்றின் எண்ணிக்கை கடந்த மூன்று தசாப்தங்களில் அதிகளவில் அதிகரித்துள்ளது. லண்டன் வனவிலங்கு அறக்கட்டளை லண்டன் நகரத்தில் மட்டும் 15,000 நரிகள் இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறது. லண்டனின் சில பகுதிகளில் சதுர கிலோமீட்டருக்கு 18 நரிகள் வரை உள்ளன. 1930களில் இருந்து நகரத்தில் நரிகள் காணப்படுகின்றன. என்று ஆய்வுகள் சொல்கின்றன. லண்டன் நரிகள் சந்தர்ப்பத்தை பொறுத்து சர்வ உண்ணிகளாக மாறி விட்டன. அதாவது அவை பல்வேறு வகையான உணவு களை உண்கின்றன. அவற்றின் உணவில் முதன்மையாக மனித கழிவுகள், எஞ்சிய உணவுகள், பழங்கள் மற்றும் காய்கறி மிச்சங்களையும்



உண்ணுகின்றன. அவை குப்பைத் தொட்டிகளை கவிழ்த்துப்போடுவதால் இங்கே லண்டன் நகர சபைக்கு பெரும் சிக்கலாக நரிகள் உள்ளன.

நரிகள் திறமையானனவை அவை கொறித்துண்ணிகள், எலிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. என்றும் ஆய்வுகள் சொல்கின்றன. அவை பெரிய பூங்காக்களில் உல்லாசமாக இருப்பதற்கும், இரவு நேரங்களில் தங்கள் இனச்சேர்க்கை செய்வதற்கும் தங்கள் துணைகளுக்கு ஒலி எழுப்பி அழைக்கின்றன. ஆனால் இலங்கை




நரிகளைப்போல லண்டன் நரிகள் ஊளையிடுவதில்லை.

தோட்டங்கள், பெரிய பூங்காக்கள் மற்றும் கைவிடப்பட்ட கட்டிடங்களில் வாழுகின்றன. இங்குள்ள உணவு மற்றும் தங்குமிடங்களைப் பயன்படுத்தி, நரிகள் லண்டன் நகர வாழ்க்கைக்கு ஏற்றவாறு மாறிவிட்டன. அடர்த்தியான தாவரங்கள் உள்ள இடங்களில், அவை சிறிய குகைகள் துளைகளை தோண்டி எடுக்கின்றன. அவற்றில் வாழப் பழகி விட்டன.நரி வளை இருக்குமிடத்தில் உணவின் எச்சங்கள் மற்றும் நுழைவாயிலுக்கு அருகில் நரி மலம் இருப்பது, நுழைவாயிலுக்கு நன்கு தேய்ந்த பாதைகள் மற்றும் நுழைவாயிலைச் சுற்றி ஒரு விரும்பத்தகாத மணம் வீசுவது. லண்டன் வாசிகளுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றன.

**நகர வாழ்க்கை ஆபத்துகள் இல்லாதது அல்ல:** நரிகளின் எண்ணிக்கையில் 60 சதவீதம் ஒவ்வொரு ஆண்டும் கார் மற்றும் வாகனத்தால் அடிபட்டு இறக்கின்றன. சிலர் நரிகளை தலைநகரின் வனவிலங்குகளில் ஒரு சுவாரஸ்யமான விலங்காக வரவேற்கிறார்கள். நரிகளைப் பற்றிய பெரும்பாலான புகார்கள் வீட்டுத் தோட்டங்களை நாசப்படுத்துவதாக வருகின்றன. தோட்டங்களில் அவற்றின் இருப்பு பற்றிய அசூசை பலரிடம் காணப்படுகிறது.

இங்கிலாந்தில் மட்டும் 3லட்சத்து 50 ஆயிரம் நரிகள் உள்ளன," "ஏப்ரல் மாதத்தில் நரிகள் பிறக்கும் போது அதுதான் உச்சக்கணக்கு ஆனால் வீதியில் வாகனத்தில் அவை அடிபட்டு 60 வீதம் இறக்கின்றன. இறப்பு விகிதத்துடன், அது எளிதாக 150,000 ஆகக் குறையக்கூடும்." நரிகள் தொடர்பான ஆய்வாளர் ஸ்காட்டின் கூற்றுப்படி, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நரிகள் முதலில் லண்டனில் கணக்கெடுக்கப்பட்டன. பின்னர் நாடு முழுவதும் உள்ள நகரங்களில் எண்ணிக்கை தொடங்கின. 1980களில், நகர்ப்புற நரிகளின் எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டது.

14 ஆண்டுகள் வரை வாழும் நரிகள் இருந்த போதிலும், ஐந்து நரிகளில் நான்கு இரண்டு வயதுக்கு முன்பே இறந்துவிடுகின்றன. அப்படியானால் அவை ஏன் இவ்வளவு அதிகமாகத் தோன்றுகின்றன? ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, லண்டனில் தெருவில் ஒரு நரியைப் பார்த்ததாகக் கூறுபவர் அரிதாவே இருந்திருப்பார். முன்பு நரிகள் நகரத்தில் வசிக்கவில்லை. அவை சுற்றி காடுகளில் இருந்தன, நிழலில் இருக்க அதிக விருப்பம் கொண்டவை. அவை. பரந்த நகர பூங்காக்கள் அதிக இடத்தை



இளைய அப்துல்லாஹ்
(லண்டன்)

அவைகளுக்கு பகல் வேளைகளில் அளிக்கவில்லை, ஏனெனில் பகலில் நாய்கள் சுற்றித் திரிகின்றன, மேலும் நரிகளை நாய்கள் வாழும் இடத்தில் அவை அண்ட விடுவதில்லை. நாய்கள் இருக்கும் இடத்திற்கு நரிகள் போக மாட்டா. நரிகள் நடமாடும் மனிதர்களைத் தாக்குவது சாத்தியமில்லை என்றாலும் கடந்த பத்தாண்டுகளில் நகரங்களில் நரிகள் குழந்தைகளைத் தாக்குவதாக அறிக்கைகள் உள்ளன. பலருக்கு நரிகள் பிடிக்காது, ஏனெனில் அவை, அசுத்தமானவை, மற்றும் நரிகளின் இனச்சேர்க்கை காலம், பொதுவாக டிசம்பர் அல்லது ஜனவரியில், உடலுறவில் அதிக சத்தத்தை இரவில் எழுப்புகின்றன. அதுவும் மனிதர்களுக்கு பிரச்சனையாக இருக்கிறது.

கிழிந்த திறந்த குப்பைப் பைகளின் கழிவுகளை நரிகள் துப்புரவு செய்கின்றன என்கிறார் அவர்., ஆனால் வூட்ஸ் அத்தகைய நடத்தைக்கான பழியை குப்பைப் பைகளை பசியுடன் கிழிக்கும் நரிகள் மீது அல்ல, வெளியே விட்டுச் செல்லும் குடியிருப்பாளர்கள் மீது சுமத்துகிறார். இருப்பினும், "மாங்கே" எனும் நோய் நரிகளால் பரவுகின்றது என்று நம்பப்படுகிறது.இது ஒருவகை சிரங்கு நோய், பொதுவாக, மாங்கே மனிதர்களுக்கு பரவாது, இருப்பினும் விதிவிலக்குகள் உள்ளன. சில வருடங்களுக்கு முன்பு, முன்னாள் வோக் ஆசிரியர் அலெக்ஸாண்ட்ரா ல்மேன் தனது வடமேற்கு லண்டன் வீட்டில் சோபாவில்



ஒரு நரியைக் கண்ட பிறகு சர்கோப்ட்ஸ் ஸ்கேபி கேனிஸ் நோயால் பாதிக்கப்பட்டார். "மீண்டும் ஒரு நரி என் அருகில் வருவதை நான் அஞ்சுகிறேன்," என்று அவர் பின்னர் கூறினார். இப்படி பல சிக்கல்களுக்கு மத்தியில் தான் நரிகள் லண்டனில் வாழுகின்றன.

மறுமுனையில், நரிகளை நேசிக்கும் நகர மக்களுக்கும் பஞ்சமில்லை, அவர்களில் சிலர் நரிகளுக்கு உணவளிக்கும் சர்ச்சைக்குரிய நடவடிக்கையை எடுக்கிறார்கள். பலர் நரிகளுக்கு தவறான வகை உணவுகளை - கொழுப்புகள் மற்றும் கார்போஹைட்ரேட்டுகள் நிறைந்த எஞ்சியவற்றை - மற்றும் தவறான வழியில் - கையால் அல்லது வீட்டின் பின் கதவிலிருந்து உணவளிப்பதாக

28 ஆம் பக்கம் பார்க்க...



# தண்டனையே குற்றம்

“மனித உரிமை மீறல் இனப்படுகொலை என்ற தீர்மானத்தை ஐநா சபையில் நிறைவேற்றுவோம்“ என்ற தலையங்கத்தைப் பத்தாவது வருசமா திருப்பியும் சலிக்காம வாசிக்க, “ நான் ஒரு பெட்டிசன் அனுப்பிறன் அதில ஒரு கையெழுத்துப் போட்டு அனுப்பிவிடும்“ எண்டு எனக்குப் பெரிய பள்ளிக்கூடத்தில படிப்பிச்சவர் ஒருத்தர் கோல் எடுத்தார். சஜித் பிரேமதாசான்டை இங்கிலீசில இருந்ததை வாசிக்க சிரமப் பட்டிட்டு பேசாமக் கையெழுத்துப் போடுவம் எண்டிருக்கத் திருப்பி கோல் எடுத்து, “ அவர் மகனுக்கு சும்மா அடிச்சுப் போட்டார், இதை விடேலாது நான் கோட்டுக்குப் போப்போறன், மனித உரிமை மீறல் “ எண்டு கடுமையாச் சொன்னார்.

இருக்கிறதில எது உரிமை. எது மீறல் எண்டு முடிவெடுக்கேலாமல் யோசிச்சபடி ஆசுபத்தரீல நடந்து போக, பக்கத்தில வந்த இன்னொரு பரியாரியார், “நான் அவங்களைக் கலைச்சு விட்டிட்டன், உவங்கள் சரிவரமாட்டாங்கள், எங்களை மாதிரி இப்பத்தைகள் இல்லை“ எண்டு மருத்துவத்தையும் பாடமாக்கித் தள்ளீடுவம் எண்டு நம்பி வந்த பெடிபெட்டைகளை பேசிக்கொண்டு வந்தார். இதையும் கடந்து கிளினிக்குக்குப் போக அங்க ஒரு அம்மா மகனோட உள்ள வந்தா. வந்தவனுக்கு ஏதும் வருத்தமோ தெரியாது பாவம் தலை மயிரெல்லாம் கறள் கட்டினமாதிரிக் கலரில இருந்துச்சுது. பதினைஞ்சு வயசு பள்ளிக் கூடத்துக்கு போறேல்லையாம், ஆனால் பக்கத்தில எங்கயோ “ கூடப் போனதில“ அடி வாங்கீட்டானாம் எண்டு உடைஞ்ச கையோட வந்தவனைப் பாக்க விளங்கிச்சுது உடைஞ்சது கை மட்டுமில்லை கன பிணைப்புக்கள் எண்டு. “ஏன்டா பள்ளிக் கூடம் போறேல்லை “ எண்டு கேக்க அம்மா “அவன் குளப்படி எண்டு சேர் அடிச்சதாலை நிண்டிட்டான்“ எண்டு பெருமைப்பட்டுச் சொன்னா.

அடிச்ச அடிவாங்கின கதையெல்லாம் கேட்டு முடிய மணி ரெண்டாக, மனிசி மத்தியானம் பள்ளிக்கூடம் முடிய ஏத்த வரச் சொன்னது ஞாபகம் வர ,நேரம் போட்டுது எண்டு போட்டு அவசரமாக் காரை எடுத்துக் கொண்டுபோய் சிக்னலில நிக்க, பின்னால “கோன் அடிச்சுது “, தான் இதுக்கெல்லாம் நிக்கேலாதாம் “என்னை விடு போப்போறன்“ எண்ட மாதிரி. பச்சை விழுந்திச்சுது. முன்னுக்கு நிண்ட நான் டக்கெண்டு எடுக்க ரெண்டு பக்கத்தாலேம் பாதுகாப்புக்கு போற பொலிஸ்காரன் மாதிரி வந்த ரெண்டு சில்லுக்காரன் நான் slow வாய்ப் போறனாம் எண்டு முறாய்ப்பா முறுக்கிக் கொண்டு போக அதைக் கவனிக்காத மா ண திரி நான் ஓடிக்கொண்டு போனன். போற வழியில பிரபல பாடசாலையில படிக்கிறது, படிப்பிக்க விட்டது எல்லாம் பள்ளிக்கூடம் விட்டோன்ன தமன்னாவைப் பாக்கப் போன கூட்டம் மாதிரி பாஞ்சு வந்து நடு ரோட்டால் போக, ஒரு மாதிரி கஸ்டப்பட்டு நேரம் போகு தெண்டு அரக்கப் பறக்க வந்தா, அண்டைக் கெண்டு பாத்து போக்குவரத்தை சீராக்கிறம் எண்டு வந்து நிண்ட சீருடைக்காரார் எல்லாச் சந்தீலேம் நான் கிட்ட வரவும் என்னை மறிச்சிட்டு மற்றவயை விடவும் சரியா இருந்திச்சுது.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

ஒரு மாதிரிப் போய்ப் பள்ளிக்கூட வாசலில நிக்க, வந்து ஏறினவை எல்லாரும் கதவைச் சாத்தின சாத்து காரோட சேத்து எனக்குத் தான் எண்டு விளங்கிச்சுது. ஏறின உடனயே என்னை ஒண்டும் கேக்காம பின்னால திரும்பி, “எத்தினை marks, எத்தினை மணிக்குக் கிளாஸ், எங்க தொப்பியைக் காணேல்லை“ எண்ட வழமையான கேள்வி-நேரம் நடக்க “இதுகளை ஒண்டும் செய்யேலாது, இங்கபார் சாப்பாடு அப்பிடியே இருக்கு, சட்டையில மை, home work செய்யேல்லையாம் எண்டு complain, நாங்கள் எல்லாம் எங்கடை அம்மா சொன்னா எல்லாம் உடன செய்வம், எண்டு பஞ்ச புராணத்தைத் தொடங்க, “சரிசரி, விடும் பாவம்“ எண்டு நான் சொல்ல, “கடைசியா நீங்களும் ஒண்டும் சொல்லாதேங்கோ நான் தான் எல்லாம் பாக்கோணும்“ எண்டு புறுபுறுத்தபடி மனிசி. வீடும் வந்திட்டுது.

பின்னேரம் நோயளியைப் பாத்துக் கொண்டிருக்க உள்ள வந்த ஒருத்தர் மகனை இருத்தி வைச்சிட்டு “ அவனுக்கு கையில நோகுதாம், எழுதவே ஏலாது எண்டு சொல்லிறான்“ எண்டு தொடங்கினார். நானும் அங்க நோகுதா இங்க நோகுதா எண்டு கேக்க அவன் அப்பாவைப் பாக்க அவர் தலையும் இவன்டை தலையும் ஒண்டா ஆடிச்சுது ஓமெண்டு. என்னடா இண்டைக்கு வந்த முதலாவது ஆளே இப்பிடி இருக்கு, ஒரு பிரச்சினையேம் காணேல்லை எண்டு போட்டு, ஒண்டுமில்லை சும்மா நோ தான் எண்டு சொல்ல முதல், “எனக்கு X-ray எடுக்கோணும்“ எண்டு அப்பா ஓடர் போட நான் தேவேல்லை எண்ட, “இல்லை வாத்தியார் அடிச்சிட்டார் என்டை மகனுக்கு, அவருக்கு நான் ஆரெண்டு காட்டிறன், உங்கடை report ஒண்டும் வேணும்“ எண்டு என்னையும் சட்டத்தில சாட்சியா சேக்கப் பாத்தார்.

என்னத்தை எழுதிறது எண்டு தெரியாம எதையோ கிறிக்கிக் குடுக்க, வெளீல போய் உந்த டாக்குத்தர் சரியில்லை நான் கொழும்பில போய்க் காட்டப்போறன் எண்டிட்டுப் போனார்.

88 எண்டு நெக்கிறன் சுண்டுக்குளிச் சந்தீல இந்தியன் ஆமி எங்கடை பள்ளிக்கூட Principal இலும் பாக்க strict ஆ இருந்த காலம். நாங்கள் கொஞ்சப் பேர் பள்ளிக் கூடத்துக்கு வேளைக்கு வந்து எல்லாரும் வரிசையா வாங்கில ஏறி நிண்டு பாக்கிறது. அவங்கடை புண்ணியத்தில சுண்டுக்குளிச் சந்தீல எல்லாப் பெட்டைகளும் இறங்கி வரிசையா நடந்தும் சைக்கிளை உருட்டிக் கொண்டும் போறதால கனநேரம் கண்ணுக்கு குளிரச்சி. பூக்களை ரசிக்கேக்க குளவிக் கூட்டுக்க கல் எறிஞ்ச மாதிரி ஆரோ ஒருத்தன் எறிஞ்ச கல்லு பொம்பிளை ஆமிக்கோ இல்லை ரீச்சருக்குப் பட்டிச்சோ தெரியேல்லை அடுத்த நாள் வகுப்பு முழுப்பேரையும் கூப்பிட்டு “ ஆர் செய்தது எண்டு சொல்லித் தாங்கோ எண்டு ஒரு கருணா இருக்க மாட்டானா எண்டு தனத் தார் தேட, கடைசிவரை முள்ளிவாய்க் காலில ஒண்டா இருந்த மாதிரி நாங்க நிக்க, காட்டிக்குடுக்காட்டிப் பிரச்சினை வரும் எண்ட தனத்தாரின்டை வெருட்டு எடுபடாமப் போக, நாலு பிரம்பு முறிஞ்சும் எல்லாரும் சிரிச்சுக்கொண்டு வகுப்புக்கு வந்தம்.

வாத்தி அடிச்சது “செய்த குளப்படீக்காய்“ இருந்த காலம்.அடிச்ச வாத்தி அண்டே மறந்தாலும் அதைக் கேள்விப்பட்டா அம்மா அந்தக்கிழமை முழுக்க கலைச்சுக் கலைச்சு இன்னும் வெழுப்பா எண்டதால கன அடிகள் வீட்டுக்குப் போகாமல் வகுப்புக்குள்ளயே சமரசப்பட்டிச்சுது.“மீண்டும் பள்ளிக்கூடம் போறம்“ எண்ட நிகழ்வெல்லாத்திலேம் படிச்சதோ படிப்பிச்சதோ ஒருத்தருக்கும் ஞாபகமிருக்காது ஆனால் அடி வாங்கினவனுக்கும் அடிச்ச வாத்திக்குத்தன் தான் ஞாபகமும் கூட, demand ம் கூட.

வீடோ, பள்ளியோ கண்டிப்பும் தண்டிப்பும் மாணவருக்கு காவலாய் இருந்த காலம் அது. இப்ப என்னெண்டாத் தண்டனைகள் கண்டிக்கபட்டு, பெற்றவர் இன்று பொலிசாகி, சமூக வலைத்தளங்கள் நீதிபதியாகிப் போய், கடைசியில் தண்டனைகள் குற்றங்களாக்கப் பட்டு நிக்கிற காலம் இது. அடிச்துக்கெல்லாம் காரணம் சரியா இல்லாட்டியும் அடி வாங்கின நான் சரியாகீட்டன் ஏனெண்டால் அடி கூட தடுப்பூசி மாதிரித்தான் வருத்தம் வர முதலே போட்டால் தான் நல்லம், வருத்தம் வராது வந்தாப்பிறகு ஊசி போட்டுப் பிரியோசன மிருக்காது. இவை யாவும் நிஜமே

டொட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00– 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும்,
எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# காதலில் பச்சை மஞ்சள் சிவப்பு

OL முடித்து AL படிக்கத் தொடங்கும் பெடியளிற்குள் ஒரு மாற்றம் வரும். அரும்பு மீசை துளிர்விட, காதலும் அரும்பும். அந்த வயதில் எல்லா பெடியளும் யாரோ ஒரு பெட்டையை கட்டாயம் மனதிற்குள் காதலித்துத் தான் இருப்பார்கள். சிலர் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று வந்த அந்த காதல் உணர்வை மனதிற்குள் பூட்டி வைத்து சாகடிப்பார்கள். வேறு சிலர் அந்த பெட்டைக்கு காதலை தெரிய வைக்க சுழற்றோ சுழற்றென்று சுழற்றத் தொடங்குவார்கள். சுழற்றும் சிலர் காதலை பெட்டையிடம் ஏதோவொரு வகையில் வெளிப்படுத்துவார்கள்.

காதலை அறிவித்தவர்களில் அரிதாய் சிலருக்கு பச்சை சிக்னலும், கனபேருக்கு சிவப்பு சிக்னலும், அநேகமான பலரிற்கு மஞ்சள் சிக்னலும் வரமாய் கிடைக்கும். ஒரு பெட்டையை மனதிற்குள் காதலிக்கும் உணர்வு அற்புதமானது. ஐம்புலன்களிற்கும் விடுமுறை அறிவித்து விட்டு மனதை இளக்கி மேகத்தில் நீச்சலடிப்பது போன்ற ஒரு உன்னதமான உணர்வு. திரைப்படங்களில் வரும் அபரிதமான வர்ணணைகள் சில நேரங்களில் அந்த பரிசுத்தமான உணர்வை கொச்சைபடுத்தி விடும். அதேவேளை சில திரையிசை பாடல்கள் பெடியளின் காதல் உணர்வை அப்படியே தத்ரூபமாக பதிவுசெய்வது மட்டுமன்றி அரும்பும் காதலெனும் செடியை தண்ணீரூற்றி செழிப்பாக்கும்.

தொண்ணூறுகளில் நாங்கள் உயர்தரம் படிக்கும் போது வெளிவந்த இரு பாடல்கள் காதல் உணர்விற்கு தண்ணீர் மட்டுமல்ல, நல்ல பசளையும் போட்டும் வளர்த்து விட்டவை. வாலி-இளையராஜா-ஜேசுதாஸ் கூட்டணியில் இதயம் படத்தில் அமைந்த “பொட்டு வைத்த வட்ட நிலா“ பாடல் அதில் முதன்மையானது. அடுத்தது வைரமுத்து-ரஹ்மான்-உன்னிகிருஷ்ணன் படைப்பில் காதலன் படத்தில் மலர்ந்த “என்னவளே அடி என்னவளே“ என்ற பாடல். இந்த இரண்டு பாடல்களையும் படத்தில் காட்சியமைத்த விதம் அநியாயத்திலும் அநியாயம். இதயம் படத்திலாவது ஹீராவை கொஞ்சம் ரசிக்கலாம். “என்னவளே“ பாட்டு திரையில் வரும்போது நக்மாவை பார்க்க சகிக்காமல் கண்ணை மூடிக்கொண்டு பாடலை மட்டும் கேட்டு ரசிக்கலாம்.

அந்த வயதில் கண்களின் பார்வைக்குள் வந்து போகும் பல நூற்றுக்கணக்கான பெட்டைகளில் அந்த ஒருத்தியை சுற்றி தான் மனம் மையல் கொள்ளும், இதயம் சுழன்றடிக்கும். இதயத்தில் வாலி தான் அதை வடிவாய் சொல்லுவார்

“இது எட்ட நின்று என்னை சுட்ட நிலா“

மனதை எட்ட நின்று தொட்ட அந்த வட்ட நிலவை எப்படி நெருங்குவது என்று மனம் பதைபதைக்கும். நெருங்க ஒரு காரணம் வேண்டாமா ? நிலவு கடுப்பாகி எங்கள் நெற்றியில் பொட்டு வைத்துவிட்டால் என்னாகும் ? எட்ட நிற்கும் நிலவிற்கு கிட்டபோக காதலனில் வைரமுத்து ஒரு ஐடியா தருவார்

> “எந்தன் இதயத்தை தொலைத்து விட்டேன்
> எந்த இடம் அது தொலைந்த இடம்
> அந்த இரண்டையும் மறந்து விட்டேன்
> உந்தன் கால் கொலுசில் அது தொலைந்ததென்று
> உந்தன் காலடி தேடி வந்தேன்“

தொலைத்த இதயத்தை தேடும் சாக்கில் அவளது காலடி தேடி வந்ததோடு வைரமுத்து நிற்பாட்டியிருந்தால் பரவாயில்லை. நிலவின் காலடி தேடி வந்த பெடியளை வைரமுத்து இன்னும் உசுப்பேத்துவார். பெடியளிற்கும் வெட்கத்தையெல்லாம் விட்டு விட்டு இன்ன இன்னதெல்லாம் செய்யுங்கோடா என்று ஒரு லிஸ்ட் போட்டுத் தருவார்.



> “கோகிலமே நீ குரல் கொடுத்தால்
> உனைக் கும்பிட்டுக் கண்ணடிப்பேன்
> கோபுரமே உனைச் சாய்த்துக்கொண்டு
> உந்தன் கூந்தலில் மீன் பிடிப்பேன்
> வெண்ணிலவே உனைத் தூங்கவைக்க
> உந்தன் விரலுக்கு சொடுக்கெடுப்பேன்
> வருடவரும் பூங்காற்றையெல்லாம்
> கொஞ்சம் வடிகட்டி அனுப்பிவைப்பேன்“

ச்சா.. காதல் வந்தா மானம் காற்றில் பறந்திடுமோ என்ன?

சுழற்றும் பெட்டை வாற வழியைப் பார்த்து பெடியள் மணித்தியால கணக்காக காவல் இருப்பதற்கும் இந்த வைரமுத் துவைத்தான் ஜெனிவாவிற்கு இழுத்துக்கொண்டு போய் போர்க் குற்றவாளிக் கூண்டில் ஏற்றவேண்டும்

காதலை சொல்ல ஒரு துணிவு வேண்டும் என்பார்கள். அந்த துணிவு வராததால் வரும் சோகத்தையும், ஆற்றாமையும், ஏக்கத்தையும், அந்த தவிப்பையும், அந்த சோகத்தையும் வைரமுத்து தான் அழகாக பதிவு செய்வார்

> “யாப்போடு சேராதோ பாட்டு
> தோப்போடு சேராதோ காற்று“

யாப்பையும் தோப்பையும் இழுத்த வைரமுத்து, உயர்தரம் படிக்கிற பெடியனை படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவும் ஒரு வரி இழுத்து விடுவார்..

> “வினா தாள் போல் இங்கே
> கனா காணும் காளை
> விடை போலே அங்கே
> நடை போடும் பாவை“

பரீட்சையை ஞாபகப்படுத்தியதும் பெடிக்கு வாழ்க்கையின் முக்கியத்துவம் முன்னுரிமை பெற காதல் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படும்.

> “நான் வாழ்வதும் வீழ்வதும்
> உந்தன் வார்த்தையில் உள்ளதடி“

என்ற வேதாங்கம் வெற்று கோஷமாய் விளங்க, படிக்க வேண்டிய புத்தகங்கள் விடிவெள்ளியாய் துலங்கும்.

கண்மூடி கர்த்தரே என்று ஜெபித்துவிட்டு, புத்தகத்தை திறந்து முதல் பந்தியை வாசிக்கத் தொடங்க, வைரமுத்து என்ற சாத்தான் துரத்தி கொண்டு வரும்.

> “ஒன்றாய் கூடும் ஒன்றாய் பாடும்
> பொன்னாள் இங்கு என்னாளோ“

பதின்மத்தில் காதலித்த பொழுதுகளும் அந்த உணர்வை அழகாக்கிய அற்புதமான பொற்காலப் பாடலகளும் பொக்கிஷங்கள்.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)


NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)



# தாளம்

சிலிர்த்தெடுத்த மேகங்களுள் சிக்கிக் கொண்டு உலவுகிறது சின்னச் சின்ன கனவுகள். அவற்றில் சிலவற்றையேனும் மெய்ப்பிக்கும் நம்பிக்கையை கொண்டு வந்த மழையோடு தோழமை கொண்டு, நீள் விசும்பின் நித்திய எழிலை நீண்டு நோக்கி இருந்தேன்.

நாட்டிய அவிநயங்களில் அசைந்திருந்த மேகங்களை வெட்டியடித்துப் பாய்ந்த மின்னல் ஆடல் கோலங்கள் கண்ணில் பட்டுத் தெறித்த மறுகணமே, சட்டச்சட சட்டச்சட டட்டா என்று தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்.

இந்த இயற்கை கற்றுத் தரும் கலை, மிக நுண்ணியமானது. பார்க்கும் இடமெல்லாம் பஞ்ச ஜாதிகளின் பிரவாகம் நிறைந்திருக்கும். மும்மை (3), நான்மை (4), ஐம்மை (5), எழுமை (7), ஒண்மை (9) என்ற எண்ணிக்கையில் இயற்கையின் அசைவுகளும், வடிவங்களும், கோலங்களும் நிறைந்திருப்பதை அவதானிக்கலாம்.

## சக்திக் கூத்திலே ஒளி ஒரு தாளம்!

இவ்வகையான அடிப்படை ஐந்து தாளங்களும் முப்பதைந்து தாளங்கள், நூற்று எழுபத்தைந்து தாளங்கள் என விரிகின்றன. இவை மட்டும் அன்றி அபூர்வ தாளங்கள், 108 தாளங்கள், மேளகர்த்தா தாளங்கள், இன்னும் பலவகை தாளங்களின் சமுத்திரத்தை கூத்த நூல், பஞ்ச மரபு, சிலப்பதிகாரம் போன்ற உன்னத நூல்களில் காணலாம்.

பாரதியை சிக்கெனப் பிடித்தால் போதும் அவன் முழு பிரஞ்சத்தையுமே காட்டித் தருவார். எத்தனையோ நன்னூல்களை நாடித்தேடிக் கற்கவும் பாரதியின் சில சொல்லாடல்களே தூண்டியாக செயல்படுகின்றன. பாரதி, தனக்கு முன் தோன்றியவற்றையும் தீண்டச் செய்கிறார். தனக்குப் பின் படைக்கவிருப்பதையும் தீர்க்கதரிசியாக சொல்லிச் செல்கிறார். பாரதியின் ஒவ்வொரு சொல்லாடல்களுமே ஒரு இயலாக பிரவாகிக்கக் கூடியது. தாளமும் அவ்வண்ணமே.தாய்மையைப் போற்றுவதற்கும்பெண்மையைக்கொண்டாடுவதற்கும் கூட தாளம் கொட்டியவர்.



**கலாசூரி**
**திவ்யா சுஜேன்**
(இலங்கை)

## "போற்றி தாய்" என்று தாளங்கள் கொட்டடா!

மனித மனங்களின் மலர்விற்கும், இவ்வாழ்வினை எவ்வாறு இனிமையாகவும் இலகுவாகவும் அமைத்துக் கொள்ளலாம் என்பதற்கும் இரு பெரும் யுக்திகளை கற்றுத் தருகிறார்.

1. இசை
2. அன்பு
" பாட்டினில் அன்பு செய் "

அன்பாகி இருக்கவும், இசையினில் இழக்கவும் தெரிந்தால் போதும் உள்ளம் நித்திய தாளமிட்டுக் கூத்தாடிப் பறந்திடும் !

> **அன்பென்று கொட்டு முரசே! - மக்கள்**
> **அத்தனைப் பேரும் நிகராம்.**
> **இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு**
> **யாவரும் ஒன்றென்று கொண்டால்.**

இயற்கையின் மூலமாய் நிற்கும் சூரியக் கதிர்களில் நின்று பிரகாசிக்கும் ஒளியை தாளம் என்கிறார்.

உயிர்களெல்லாம் மூலமாய் இருக்கும் தாய்மையை போற்றிடத் தாளம் கொட்டச் சொல்கிறார்.

உணர்வுகளுக்கெல்லாம் மூலமாய் இருக்கும் அன்பிற்கு தாளம் கொட்டுகிறார். ஆக, நம் வாழ்வியலோடு பிரிக்க முடியாத பேருண்மை, தாளம் !

> **நன்னும் பாட்டினொடு தாளம் - மிக**
> **நன்றாய் உளத்தழுந்தல் வேண்டும் - பல**
> **பண்ணில் கோடிவகை இன்பம் - நான்**
> **பாடத் திற நடைதல் வேண்டும்"**



தாளம் என்பது கலையோடு மட்டும் கலந்த விடயமல்ல.

தாளம் என்பது நம் ஒழுக்கம் ,நம் இயக்கம், உறுதி, தெளிவு, சீர்மை, நேர்த்தி, வாழ்வின் பண்பு. நம்மையும் நம்மைச் சூழ்ந்தோரையும் இன்பமாக வைத்திருக்க, முரண்கள் இல்லாத நாட்களாக நகர்த்திச் செல்ல, இடையின்றி இயங்கிக் கொண்டிருக்க இவை அவசியம். ஆனால் தாளம் பிசகினால் வரும் விளைவு மிக அதிகம்.

அறம் கெட்ட பின் அழுதென்ன லாபம்? தாளம் என்பதும் நம் தமிழோர் கற்றுத் தந்த பெரும் பாடங்களின் கூறு. உள்ளத்தினுள்ளே ஆழப் பதிய வேண்டிய மந்திரச் சொல் !

தாளம் தாளம் தாளம்
தாளத்திற்கோர் தடையுண்டாயின்
கூளம் கூளம் கூளம்




AJ
ENTERTAINMENT
ARUN JESUTHASAN
OLYYN THANASINGH
PRESENTS
POWERED BY
tamil.de
portal • lifestyle • entertainment
SANTHOSH
NARAYANAN
LIVE IN GERMANY
07.06.2025
GET YOUR TICKETS NOW
ticketmaster®







# The fantasy of single life

# தனித்து வாழ விரும்பும் இளைய தலைமுறை!




தீபா சீறிதரன்
(தைவான்)


கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக, தனித்து வாழும் வாழ்க்கையின் சிந்தனை உலகம் முழுவதும் அதிகரித்து வருவதைக் காணலாம். இதைப் பெரும்பாலான மூத்த தலைமுறையினர், இன்றைய இளைஞர்களுக்கு உறவின் மீது இருக்கும் உறுதிப்பாட்டின் குறைவு என்றும் உறவுகளை மதிக்காத தன்மை என்றும், இன்றைய தலைமுறையினர் சகிப்புத்தன்மையற்றவர்கள் என்றும் பார்க்கிறார்கள். ஆனால் இதை மற்றொரு கோணத்திலிருந்து பார்க்கும் போது, இந்தத் தலைமுறை உறவுகளை அவமதிக்கும் நிலைப்பாட்டில் இல்லை, மாறாக உறவுகளை மாறுபட்ட முறையில் எதிர்பார்க்கின்றனர் என்பது விளங்கும். அவர்கள் தங்களின் உணர்ச்சி நலனுக்கும் ( emotional well being) தனித்துவத்திற்கும் முன்னுரிமை கொடுக்கும் பாதுகாக்கும் உறவுகளுடன் இணைந்து வளரும் சூழலையே விரும்புகிறார்கள் என்பதே என்னுடைய புரிதல். இவர்கள் பெரும்பாலும் “வாழ், வாழவிடு (Live, let live) “ என்ற கோட்பாட்டில் வலுவான நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

முந்தைய காலங்களில், தனியுரிமை (privacy) என்பது வேறு விதமாகவே இருந்தது. குழந்தைகள் வாலிபத்திற்குப் பிறகும் பெற்றோருடன் அறையைப் பகிர்ந்து வாழ்வது கூடப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது, அது தனியுரிமைக்கு எதிரானதாகக் கருதப்படவில்லை. ஆனால், காலப்போக்கில் நிலைமைகள் மாறிவிட்டன. இன்று, மக்கள் தங்கள் தனிப்பட்ட முடிவுகளையும் தேர்வுகளையும் மிகவும் பொக்கிஷமாகப் பார்க்கிறார்கள். முன்பெல்லாம் புதிதாகத் திருமணமான தம்பதிகளிடம் குழந்தைகள் குறித்துக் கேட்கப்படுவதோ அல்லது படிப்பு முடித்த ஆண் பெண்களிடம் திருமணத் திட்டங்கள் பற்றிக் கேட்கப்படுவதோ இயல்பாகவே இருந்தது. ஆனால் இப்படிப் பட்ட கேள்விகளை இன்றைய தலைமுறையினர் தொல்லையாக உணர்கிறார்கள். தேவையில்லாமல் மூக்கை நுழைக்கும் நாகரிகமற்ற செயலாகக் கருதுகின்றனர். குழந்தைகளும் சிறிய வயதிலேயே தனிப்பட்ட இடத்தையும் தனித்துவத்தையும் நோக்கிய பார்வையில் நகரத் துவங்கியிருக்கின்றனர். (இன்றைய குழந்தைகளுக்கு முன்பிருந்த தலைமுறையை விட மிகவும் சீக்கிரமே தனியுரிமை தேவைப்படுகிறது, மேலும் அவர்கள் சிறிய வயதிலேயே தனித்துவத்தைக் கோருகின்றனர்)

இவையெல்லாம் சரியா தவறா என்ற கேள்விகளுக்கு முன் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையில் தான் நாம் இன்று இருக்கிறோம். ஒரு மாற்றம் ஏற்படும் பொழுது அதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மனப்பான்மை ஒவ்வொரு தலைமுறையினரும் எதிர்கொள்ளும் சவால் தான். எனவே இதை எதிர்மறையாகப் பார்ப்பது என்பதிலிருந்து விலகி இந்த மாற்றங்களுக்கான காரணங்களைப் பகுத்தறிந்து பார்க்கும்பொழுது அதற்கான தீர்வு சற்று எளிமையாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இன்றைய தலைமுறையினர் தனிநிலை வாழ்க்கையைத் தேர்வு செய்வதற்கான முக்கியமான காரணங்களாக நான் பார்ப்பது:

தனிநிலைத் தேர்வும் சுதந்திரமும்– நவீன வாழ்க்கை அதிகமான செலப்ஃ– எக்ஸ்ப்லோரேஷன், வேலை வளர்ச்சி, பயணம், மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகளை வழங்குகிறது. பலர் உறவுகளில் சமரசம் செய்வதை விடத் தங்களின் ஆற்றலை, தனித்துவத்தை முன்வைக்கும் செயல்பாடுகளுக்கு முதலீட்டாக்குவதை விரும்புகிறார்கள். இதற்கு இன்னொரு முக்கியக் காரணம் அவர்களின் சொந்த அடையாளத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற மன அழுத்தம். பல தலைமுறைகள் ஒரே சமுதாயத்தில் இணைந்து வாழும் இன்றைய சூழலில், நடுத்தர வயதினர் தங்கள் தனித்துவத்தை நிரூபிக்கப் போராடுகிறார்கள். மேலும் இன்றைய உறவின் உருவம் பல அடுக்குகளில் மாறிவிட்டது, அதில் பொருந்துவதற்கான முயற்சி பலருக்குக் கடினமாக மாறியுள்ளது. எனவே தனித்து வாழும் வாழ்வை நோக்கிப் பலரும் நகர்கின்றனர்

இவ்வாழ்க்கையைத் தேர்வு செய்வதற்கான பிற காரணங்கள்:

உணர்ச்சி நலன் (emotional well-being) – உறவுச் சிக்கல்களிலிருந்து விடுபட்டு அமைதியாக இருக்க விரும்புகிறார்கள்.

பொருளாதார மேலாண்மை – தங்களின் சொந்தப் பொருளாதாரத்தை விரிவுபடுத்தி அதைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். பலருக்கும் லௌகீக வாழ்க்கை மீதான விருப்பம் அதிகரித்துள்ளது.

தொழில்நுட்ப மற்றும் இணையதள உறவுகள் – சமூக ஊடகங்கள் மற்றும் ஆன்லைன் பொழுதுபோக்குகள், தனிமனிதரின் வாழ்க்கையைப் பெரிதும் ஆக்கிரமித்துள்ளன. முகம் தெரியாத மனிதர்களுடன் சமூக வலைத்தளங்களில் தங்களை இணைத்துக் கொண்டு கருத்தியல் ஒற்றுமை இருப்பவர்களிடம் பொது விஷயங்களைப் பேசிவிட்டு, விலகிக் கொள்வதைப் பெரும்பாலும் விரும்புகிறார்கள். இதில் பெரிய உணர்வு சிக்கல்கள் இருப்பதில்லை. எங்கேயோ இருக்கும் ஒரு நபரிடம் அறிவு சார்ந்த விஷயங்களையும் உணர்வு சார்ந்த விஷயங்களையும் பேச்சளவில் நிறுத்திக் கொள்வதால் அதில் பெரிய மன அழுத்தம் ஏற்படுவதில்லை என நினைக்கிறார்கள்.

பரிணாமம் – முந்த காலங்களில் உறவுகள் என்பது மனித இனத்தின் பாதுகாப்பிற்கும், இனப்பெருக்கத்தி ற்கும், பொருளாதார நிலைத்தன்மை க்கும் அவசியமாக இருந்தன. ஆனால், நவீன உலகில் உயிர்வாழ்தல் (sur vival) என்பது பெரும்பாலும் நவீன ங்களைத் தழுவிக் கொள்ளும் தன்மை ( adaptability) புத்திசாலித்தனம் மற்றும் உணர்ச்சி நிலைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் இவை அனைத்துமே திருமண/ காதல் உறவுகளின்றிச் சுயாதீனமாகவும் அடைந்து கொள்ளும் நிலையும் உருவாகியிருக்கின்றது.

என் பார்வையில், ஆண்களை விடப் பெண்கள் தனித்து வாழும் வாழ்க்கையை அதிகமாகத் தேர்வு செய்கிறார்கள் என நினைக்கிறேன். இதற்குப் பல்வேறு சமூக, பொருளாதார, மற்றும் வளர்ச்சி சார்ந்த காரணங்கள் உள்ளன.

**(ஆனி மாத இதழில் மேலும் விபரமாக கட்டுரை தொடரும்.)**






அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)




# ‘பந்து பெருசா இருக்குப்பா, அதுதான் கோல் போட முடியலை’

## உழைப்பின்றி அமையாது உலகு!?

இன்றைய உலகம் இவ்வளவு அழகாக, செழிப்பாக, உயர்வாக இருப்பதற்குக் காரணம் உழைப்பாளிகளே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மேகத்தை உரசியபடி கதை பேசும் கட்டிடங்களானாலும் சரி, உள்ளங்கைக்குள் வித்தை காட்டும் தொழில்நுட்பங்களானாலும் சரி, நமது உணவு மேஜையில் வந்திருக்கும் உணவுப் பொருட்கள் ஆனாலும் சரி, நம்மை சொகுசாக அழைத்துச் செல்லும் வாகனங்களானாலும் சரி, எல்லா இடங்களிலும் உழைப்பாளர்களின் மூச்சுக் காற்றே நிரம்பியிருக்கிறது.

உழைப்பாளர்கள் தங்களைக் கட்டியெழுப்புகிறார்கள், குடும்பங்களைக் கட்டியெழுப்புகிறார்கள், சமூகத்தைக் கட்டியெழுப்புகிறார்கள், தேசத்தைக் கட்டியெழுப்புகிறார்கள். உழைப்பாளர்கள் இல்லையேல் இந்த உலகம் இல்லை. மனிதன் தோன்றிய காலம் முதல், உழைப்பு அவனது இதயத் துடிப்பாகவே இருக்கிறது.

உழைப்பு பணத்தை மட்டும் வைத்து நிர்ணயம் செய்யப்படுவதில்லை. வீட்டில் காலில் சக்கரம் கட்டியபடி பாய்ந்து வேலை செய்யும் அம்மாக்கள் இரட்டைச் சம்பளத்துக்கு உரியவர்கள். எனில் உழைப்பாளர்கள் மதிக்கப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும், மரியாதையாய் நடத்தப்பட வேண்டும்.

ஆனால் உண்மையில் இன்றைய உலகம் தொழிலாளர்களை உதறிவிட்டு, முதலாளிகளையே முத்தமிடுகிறது. உழைப்பவர்களின் கூக்குரல் உதாசீனம் செய்யப்படுகிறது, தொழிலதிபர்களின் முனகலும் முக்கியத்துவம் பெறுகிறது. அழகிய சாலைகளைக் கட்டியெழுப்பும் தொழிலாளர்கள் வெறும் கால்களுடன் தான் நடக்கிறார்கள். அழகிய மாளிகைகளைக் கட்டியெழுப்புபவர்களுக்கு தெரு ஓரங்களில் பிளாஸ்டிக் குடிசைகளே கிடைக்கின்றன. உயிர் கொடுத்து விளைச்சலைக் காண்பவர்களுக்கு பட்டினியே பரிசாய்க் கிடைக்கிறது! தேசத்தின் முதுகெலும்புகள், புறக்கணிக்கப்படுகின்றன. முதலாளிகளின் பூஜிக்கப்படுகின்றனர்.

கோவிட் காலங்களில் பல தொழில்கள் டிஜிடல்மயமானபோது பல நூறு மைல்கள் நடந்தனர் உழைப்பாளிகள். குழந்தைகளைத் தோளில் சுமந்தபடி, கால்களில் செருப்புகள் அறுந்து வீழ, உயிரைக் கையில் பிடித்தபடி அவர்கள் நடந்தார்கள். விடாமுயற்சி, பொறுமை, சகிப்புத்தன்மை இவற்றுக்கெல்லாம் ஒரு முனைவர் பட்டம் உண்டெனில் இவர்களுக்குத் தான் தாராளமாகத் தரவேண்டும். ஆனால், உலகம் இவர்களை உதாசீனம் செய்கிறது.

இதெல்லாம் ஒரு புறம் இருக்க,இன்றைக்கு உழைப்பை விளையாட்டாய்ப் பார்க்கின்ற ஒரு தலைமுறை உருவாகியிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். வாங்கும் ஊதியத்துக்கேற்ற வேலையைச் செய்ய வேண்டும் எனும் மனநிலை கொஞ்சம் கொஞ்சம் மங்கி வருகிறது.



வெளிச்சத் திரைகளை பெருவிரலால் தேய்த்துத் தேய்த்து பொழுதுகளைப் போக்குகிறது இளைய தலைமுறை. வேலை என்ன ஸ்டேட்டஸில் இருக்கு என்பதைச் சொல்லத் தெரியாதவர்கள் மணிக்கொரு தரம் சமூக வலைத்தளங்களில் ஸ்டேட்டஸ் மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். வேலை நேரங்களை விட அதிகமான நேரங்களை காபி நேரங்களே கபளீகரம் செய்து விடுகின்றன. நிறைய சம்பளம் வேண்டும் என கேட்பவர்கள், நிறைய வேலை செய்வேன் என சொல்வதில்லை.

சமூகம் உழைப்பாளிகளைச் சுரண்டும் போது அவர்களுக்கான உற்சாகம் குறைகிறது. உழைப்பாளிகளே தங்கள் கடமையை உதாசீனம் செய்யும் போது வளர்ச்சி குறைகிறது. செய்யும் தொழிலே தெய்வம் எனும் கூற்று இன்று இளைய தலைமுறையினரால் ‘கிரிஞ்ச்‘ எனவும் ‘பூமர்‘ எனவும் விமர்சிக்கப்படுகிறது.

ஒரு வித ஃபாஸ்ட் புட் கலாச்சாரமே எங்கும் உலவுகிறது. வளர்ச்சி, லாட்டரி போல் இருக்க வேண்டும் என மக்கள் நினைக்கிறார்கள். என்னால் எவ்வளவு அதிகமாய்க் கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கொடுப்பேன் என்று தான் நமது முன்னோர்கள் உழைத்தார்கள். ஆனால் இன்றோ, குறைந்த பட்சம் எவ்வளவு வேலை செய்தால் வேலையைத் தக்க வைத்துக்

17 ஆம் பக்கம் பார்க்க...




கொள்ளலாம் என்றே நினைக்கின்றனர். வைஃபை ஒன்றிரண்டு புள்ளிகளுடன் இழுத்து இழுத்து வேலை செய்வது போல தான் பலரும் வேலை செய்கிறார்கள்.

வேலை இடங்களெல்லாம் ஒரு மினி தியேட்டர் போல மாறிக்கொண்டிருக்கின்றன. கைகளில் இருக்கும் மொபைல் ஏதோ ஒன்றை காட்டிக் கொண்டே இருக்கிறது. நடப்பவை உரையாடல்களாக, படங்களாக, ரீல்களாக, ஸ்டேட்டஸ்களாக பரிமாறப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

கற்றுக் கொள்ள வேண்டும் எனும் ஆர்வம் மங்கிப் போக, இணையத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் எனும் நோக்கமே முதன்மையாய் மாறியிருக்கிறது. யூடியூப் சமையல் குறிப்பு ஓடிக் கொண்டே இருக்கும் போது தான் சமைக்கவே செய்கின்றனர் இளைய தலைமுறையினர். சீக்கிரம் பணம் சம்பாதிக்க வேண்டும், ஆனால் கடினமாய் உழைக்கக் கூடாது. இதுக்கு ஏதாச்சும் வழியிருக்கா ? என்று தான் நவீன உழைப்பாளர்கள் தேடுகின்றனர். அதற்காக மூன்லைட்டிங் என ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வேலை செய்யவும் முயல்கிறார்கள்.

ஒரே நேரத்தில் இரண்டு பேரைத் திருமணம் செய்த அவஸ்தையில், வாழ்க்கையைக் குழப்பியடிக்கிறார்கள்.

# ‘பந்து பெருசா இருக்குப்பா, அதுதான் கோல் போட முடியலை’



ஒவ்வொரு பந்தை எதிர்கொள்ளும் முன்பும், அங்கும் இங்கும் நடக்கும் கிரிக்கெட் பேட்ஸ்மேனைப் போல இன்றைய பணியாளர்கள் ஒவ்வொரு சின்ன வேலைக்கும் இடையே பிரேக் எடுத்துத் தள்ளுகிறார்கள். அவர்கள் வேலை செய்யும் நேரத்தை விட அதிகமாய் இந்த ஓய்வு நேரம் வந்து உட்கார்ந்து விடுகிறது.

ஏதோ வேலை என்பது ஒரு தண்டனை என்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். இது வளர்ச்சிக்கான வாய்ப்பாய் பலரும் பார்ப்பதில்லை. அதனால் தான் நிறுவனத்திடமோ, தலைமையிடமோ பிடிப்பு இல்லாமல் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். யார் எங்கே இறங்கினால் எனக்கென்ன என வண்டியை ஓட்டும் ஓட்டுநர் போல, பணியாளர்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

அலுவலகங்களில் சந்திக்கும் இன்னொரு மிகப்பெரிய பிரச்சினை, எந்த ஒரு தவறையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இன்றைய இளம் பணியாளர்கள் இல்லை என்பது தான். ஒரு சிக்கல் என்றால் அதை தீர்க்க ஓடும் கால்கள் அவர்களிடம் இல்லை. இன்னொருவன் மீது குற்றம் சாட்ட நீளும் கைகள் மட்டுமே இருக்கின்றன. ‘பந்து பெருசா இருக்குப்பா, அதான் கோல் போட முடியல‘ என்று கூட சொல்வார்கள் இவர்கள். இவர்கள் தப்பித்தல் மனநிலையும், ஒப்பித்தல் மனநிலையும் மட்டுமே கொண்டிருக்கிறார்கள்.

முன்பெல்லாம் வேலை நேரத்துக்கு முன்னாடியே வந்து, வேலை நேரம் முடிந்தாலும் கடைசி வேலையை முடித்து விட்டுச் செல்வது உழைப்பாளர்களின் வாடிக்கை. இப்போது அதிகாலை வரை போர்வைக்குள் போன் நோண்டிவிட்டு, எப்போதோ தூங்கிப் போய், கொட்டாவியுடன் தான் அலுவலக வாசலை எட்டுகிறார்கள். அலுவலகத்தை விட்டு வெளியேறும் போது மட்டும் ஏதோ ஆம்புலன்ஸ் போல சீறிப் பாய்கிறார்கள்.

தெரியாததைத் தெரியாது என ஒத்துக் கொள்வதில் தான் கற்றல் துவங்குகிறது. அங்கு தான் நம் ஆற்றலும் வெளிப்படுகிறது.

தெரியாதவற்றையெல்லாம் தெரியும் என சொல்லும் வறட்டு கௌரவம் இன்றைக்கு தொழில் துறையையும் வெகுவாய்ப் பாதிக்கிறது.

**உழைப்பாளர்களால்**
**தான் உலகம் இயங்குகிறது !**
**உழைப்பாளர்கள்**
**மதிக்கப்பட வேண்டும் !**

அதே நேரத்தில் உழைப்பாளர்கள் உழைப்பை மதிக்க வேண்டும், நேசிக்க வேண்டும், அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். எனும் சிந்தனைகள இந்த உழைப்பாளர் தினம் நமக்குக் கற்றுத் தரட்டும்.

# ஜெர்மனி வயோதிப பராமரிப்பு நிலைய 20 ஆவது ஆண்டுவிழா



13.04.2025 அன்று ஜெர்மனி Bürstadt என்னும் கிராமத்திலே காந்தவதனி செல்வநாதன் அவர்களின் Bürgerhaus என்னும் பராமரிப்பு நிலையத்தின் 20 ஆவது ஆண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த பராமரிப்பு நிலையத்தில் ஈரான்,அல்பானியா, சிங்களம், ரஷ்யா,ருமேனியா,இந்திய மலையாளம், பிரேசிலியா, துருக்கி ,ஸ்பானியன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவருடைய நிருவாகத்தின் கீழ் பணி புரிகின்றார்கள். அவர்களில் பலர் மேடையில் தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். திரு.செல்வநாதன் அவருடைய கணவனும் அவருக்கு ஒத் தாசை புரிவதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இந்நிகழ்வில் பிளமிங்கோ நடனம், பரதநாட்டியம், இசை நிகழ்ச்சி, ஜெர்மனிய பாடல்கள், ஜெர்மனிய தமிழ் விருந்தினர்களின் பாராட்டுக்கள் ஆகியவை நான்கு மணித்தியாலங்களை சோர்வு இல்லாமல் நகர்த்தியது. வதனி செல்வநாதன் அவர்களுடைய மகன்



## வதனி செல்வநாதன் அவர்களின் சேவைக்குப் பாராட்டு.

நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியிருந்தார்.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக அந் நகர மேயர் FR. Barbara schader கலந்து சிறப்பித்தார். அவர் உரையாற்றுகின்ற போது காந்தவதனி செல்வநாதன் அவர்களின் சேவையின் முக்கியத்துவத்தை விளக்கி அவர்களை வெகுவாகப் பாராட்டினார். ஜெர்மனிய மொழி பேசுகின்ற பல நட்டவர்களும் தமிழ் விருந்தினார்களும் திருமதி



வதனி சிவநாதன் அவர்களின் சேவையைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.தமிழ் பெண்களுக்கு ஒரு முன்னோடியாக திகழ்கின்ற காந்தவதனி செல்வநாதன் அவர்களைப் பாராட்டி மகிழ்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஒரு நிறைவான நிகழ்ச்சியாக கிபுலா அமைந்திருந்தது.

செய்தி: கௌசி.சிவபாலன்







# ஜெர்மனி மண் சஞ்சிகை 35 ஆவது ஆண்டுவிழா

ஜெர்மனியில் 05.04.2025 அன்று Claubetghalle, kampstr- 23,Duisburg இன்னும் இடத்தில் கல்வி,கலை, இலக்கிய, சமூக, மாத சஞ்சிகையாகிய "மண்" என்னும் சஞ்சிகை தன்னுடைய 35 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. இச்சஞ்சிகை யின் ஆசிரியர் வைரமுத்து சிவராஜா அவர்கள் மனிதநேயப் பணியை இலங்கை யில் செய்து வருகின்றார். புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து பணத்தை சேகரித்து இலங்கையில் வாழுகின்ற வறிய மக்களு க்கு உதவி செய்கின்ற பாரிய பணியை இவர் செய்த வருகின்றார். அப்பணிக்கு செலவு செய்கின்ற பணம் பற்றிய விபரங்களை இச்சஞ்சிகையில் வெளியீடு செய்து வருகி ன்றார்.

தமிழரின் பழம்பெரும் கலையாகிய பறை இசையுடனும் மங்கல விளக்கேற்றலுடனும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. வரவேற்புரை, வரவேற்பு நடனம் போன்றன இடம்பெற்றன. வரவேற்புரையை மண் சஞ்சிகை ஆசிரியரின் மகள் சிவதர்சினி பிராங்களின் நடத்தியிருந் தார். தலைமையுரையை கவிஞரும் எழுத் தாளர் சங்க உபதலைவருமான அம்பலவன் புவனேந்திரன் நிகழ்த்தினா. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக சுவிஸ் நாட்டில் இருந்து எழுத்தாளர் திரு.க.அருந்தவராஜா கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சிகளை சிவவிநோ பன், சாந்தினி துரையரங்கன் ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தார்கள். கர்நாடக இசை, நடனம், பியானோ இசை, பாடல்கள், பட்டிம ன்றம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் நடை பெற்றன. தமிழர் அரங்க மாணவர்கள், ஆடற்கலா லய மாணவர்கள், கனகசபை கலாலய மாணவர்கள் நிகழ்ச்சிகளை வழங்கி இருந் தார்கள்.

இச்சஞ்சிகையில் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், இச்சஞ்சிகைக்கு எழுதி வருகின்ற எழுத்தாளர்களுக்கும், ஜெர்மனியை தடம் பதித்த எழுத்தாளர்க ளுக்கும், கலைஞர்களுக்கும், தமிழில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களு க்கும், ஊடகவியலாளர்களுக்கும், மனித நேயப் பணிக்கு உதவியவர்களுக்கும், சமூக



செயற்பாட்டாளர்களுக்கும், மறைந்த எழுத் தாளர்களுக்கும், மண் சஞ்சிகை ஆசிரியர் விருது வழங்கிக் கௌரவித்தார்.

நிகழ்ச்சியில் பங்கு பற்றிய மாணவ மணிகளுக்கு சான்றி தழ்களும் பரிசில் களும் வழங்கப்பட்டன. மண் சஞ்சிகை ஆசிரியரையும் அவர் மனைவி யையும் பல நிறுவனங்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டி கௌரவமும் அளித்தனர். மிகச் சிறப்பாக இந்த நிகழ்ச்சி நடைபெற்று முடிவடைந்தது.

கௌசி ஜெர்மனி



# வண்ணத்து பூச்சியும் ஏணியும்

முத்து விஜயராகவன் (இலண்டன்)

ஏணிகளின்
படிக்கட்டுகளில்
ஏறுதலும்
சிறகுகள் கிடைக்கும்போது
வண்ணத்து பூச்சியாய்
பறத்தலும்
என் இயல்பு

என் பாதையில்
பாம்புகள் இல்லை
அதனால் அசுகி
விழுதல்களும் இல்லை

வாழ்க்கை
தாயக்கட்டைகளை
உருட்டும் போதெல்லாம்
ஏதோ ஒரு எண்ணில்
அதிஷ்டமோ
துர் அதிஷ்டமோ
வந்து சேர்கிறது

பணமாகவோ
பொருளாகவோ
வேறு எந்த வடிவிலோ
அது என்னை
ஆட்டி படைக்கிறது

அது விதியா?
விபத்தா?
அறிவுக்கு தெரியவில்லை
அதுவே
புழுவாகி துடித்து என்னை
வண்ணத்து பூச்சியாகவும்
உருமாற்றம் செய்கிறது

பறப்பதில் இருக்கும் சுகம்
ஏறுவதை விட
அலாதியானது

அந்த பரமானந்தம்
பூவுலகில் சேகரித்த
தேன்களை விடவும்
உயர் தரமானது

ஆதலால்
சிகரங்களை தேடி
சிரமப்பட்டு
ஏறிக்கொண்டிருப்பவர்களே
ஒருதரம்
சிறகுகள் கொண்டு
பறந்து பாருங்கள்
வண்ணத்து பூச்சிகளாய்!








# பிரபஞ்சம் உண்மையில் 1300 கோடி ஆண்டுகள் பழமையானதா?

பிக் பேங்க் - இந்த வார்த்தையை கேட்டதுமே நம் மூளையில் வெடிக்கும் ஒரு அசாதாரண கற்பனை. சுமார் 1380 கோடி ஆண்டுகளுக்கு முன் எதுவும் இல்லாத நிலையிலிருந்து, ஒரு குறுநொடியிலும் கூட குறைவான தருணத்தில், நமது பிரபஞ்சம் உருவானதாக நாம் பள்ளிகளில் கற்றது. இது நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மை என்று சொல்லப்படும் ஒன்றாகும். ஆனால், இந்த எண்ணிக்கையே தற்போது சிக்கலில் உள்ளது. புதிய ஆய்வுகள் மற்றும் வலுவான மாற்று கோட்பாடுகள், பிரபஞ்சத்தின் உண்மையான வயதை பற்றி ஆழமான கேள்விகளை எழுப்புகின்றன. மனிதன் எப்போதுமே கடந்த காலத்தின் எல்லைகளைத் தொட்டுத் திரும்பிப் பார்க்க முயன்றிருக்கிறான். ஆனால்- எது உண்மையான தொடக்கம்?

பரிணாம அளவீடு என்றழைக்கப்படும் cosmic expansion rate என்பது, நமது பிரபஞ்சம் எவ்வளவு விரைவாக விரிவடைந்துவருகிறது என்பதனை அளவிடுகிறது. இந்த அளவீட்டின் அடிப்படையில் பின்வாங்கி கணக்கிடும்போது, நமது பிரபஞ்சம் சுமார் 1379.7 கோடி ஆண்டுகள் பழமையானது என 2021ல் அறிவிக்கப்பட்டது.

ஆனால் இங்கேதான் விஷயம் சுவாரசியமாகிறது.

2013ல் கண்டுபிடிக்கப்பட்ட Methuselah Star (HD 140283) எனும் நட்சத்திரம், கணிப்புகளின்படி சுமார் 1446 கோடி ஆண்டுகள் பழமையானது. அதாவது, அது பிரபஞ்சத்தின் தற்போதைய வயதைவிட முதியதாக தோன்றுகிறது! இது எப்படி சாத்தியம்?

மேலும், நமது பிக் பேங்க் நடந்த 30 கோடி ஆண்டுகளுக்குள், ஏற்கனவே முதிர்ச்சியடைந்த பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்கள் மற்றும் விண்மீன் மண்டலங்கள் இருந்துள்ளன என்பதும், இந்த குழப்பத்தை தீவிரப்படுத்துகிறது. பிரபஞ்சம் இவ்வளவு வேகமாக உருவாக முடியுமா?

இந்நிலையில், பழைய ஓர் ஆய்வுக் கோட்பாடு மீண்டும் கவனத்தை ஈர்க்கிறது. அது Fritz Zwicky என்கிற வானியலாளரின் "தயார்ட் லைட்" கோட்பாடு. அதன்படி, ஒளிக்கதிர்கள் (photons) நீண்ட தூரம் பயணிக்கும்போது அவை ஆற்றலை இழக்கின்றன, எனவே தூரவிரைந்த விண்மீன்களில் காணப்படும் சநனளாகைவ (சிவப்பு மாற்றம்) அவற்றின் வேகமான நகர்வால் அல்ல, ஒளிக்கதிர்களின் ஆற்றல் இழப்பால் ஏற்படுகிறது.



இக்கோட்பாட்டினைப் பயன்படுத்தி தற்போது சில வானியலாளர்கள் ஒரு புதிய விளக்கத்தை முன்வைக்கிறார்கள். அதன்படி, பண்டைய விண்மீன்களின் உருவாக்கம் ஒரு சில கோடி ஆண்டுகள் அல்ல, பல்லாயிரம் கோடி ஆண்டுகள் ஆனது என்றும், அதனால் தான் அவை இவ்வ ளவு விரைவாக முதிர்ந்திருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. இந்த கோட்பாடு பிரபஞ்சத்தின் உண்மையான வயது 2670 கோடி ஆண்டுகள் என நமக்குத் தெரிவிக்கின்றது!



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

இது சாத்தியம் என்றால், நம்முடைய காலக் கணிப்பு முறைகளில் பெரும் திருத்தங்கள் தேவைப்படும்.

இது விஞ்ஞானத்திற்கான ஒரு முக்கிய நினைவூட்டல்! நாம் அறிந்திருக்கிற விஷயங்கள் நிலையானவை அல்ல. புதிய தரவுகள், வலுவான கேள்விகள், மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் தான் அறிவியலை முன்னோக்கி அழைத்துச் செல்கின்றன.

ஒரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், நாம் ஒவ்வொரு இரவிலும் பார்க்கும் cosmic microwave back ground (CMB) என்பது, பிக் பேங்க் நடந்த 380,000 ஆண்டுகள் பிறகு வெளியான ஒளி. அதனை பார்ப்பதன் மூலம் நாம் நேரடியாக, பிரபஞ்சம் உருவான தருணத்தை "கண்ணால்" காண்கிறோம்!

இந்த அனுபவம் நம்மை அச்சமூட்டும் அதிசயத்துக்குள் இழுத்துச் செல்கிறது. நாம் வாழும் பிரபஞ்சம், இன்னும் மிகப் பழமையானதா? நம் அளவீடுகள் தவறாகவா இருக்கின்றன? இவை அனைத்தும் இன்னும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய கேள்விகளாகவே உள்ளன.

2025 இல் சந்திரனில் கால் வைக்கும் முதல் பெண்ணை நீங்கள் காணத்தான் போகின்றீர்கள். அதுபோல் முதல் விண் வெளி ஹோட்டல் 2027 இல் எதிர் பார்க்கப்படுகிறது. உலகின் முதல் விண்வெளி ஹோட்டல், வாயேஜர் ஸ்டேஷன ( Voyager Station) 2027 இல் திறக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இது பூமியிலிருந்து சுமார் 1,200 மைல்கள் உயரத்தில், குறைந்த பூமி சுற்றுப்பாதையில் அமைந்திருக்கும், மேலும் இது ஆர்பிட்டல் அசெம்பிளி கார்ப்பரேஷனால் வடிவமைக்கப்பட்டது.

28 ஆம் பக்கம் பார்க்க...







அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)





# அமெரிக்காவில் உள்ள சுதந்திரதேவி சிலையை விட 30 மீட்டர் உயரமான கருட விஷ்ணு சிலை!

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதுவே நான் சொன்ன darson Airport (Bali) இல் இறங்கியதும் தெரியும் உயரமான சிலை ஆகும். இந்தோனேசியச் சிற்பியான நியோமன் நுவார்டா (Nyoman Nuarta) என்பவரால் 1990-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. சிலையின் கட்டுமான வேலைகள் 1997-ஆம் ஆண்டில் தொடங்கின. இருந்தாலும் உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக இந்தத் திட்டம் திடீரென நிறுத்தப்பட்டது.

பதினாறு வருட இடைவெளிக்குப் பிறகு 2013 ஆம் ஆண்டில் கட்டுமானம் மீண்டும் தொடங்கியது. இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்படும் போது சர்ச்சைகள் இல்லாமல் இல்லை. பாலித் தீவின் ஆன்மீக சமநிலையைச் சீர்குலைக்கலாம் என்று பாலித் தீவின் மத அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனாலும் பாலித் தீவின் இந்துப் பொதுமக்களின் ஆதரவு இருந்ததால் திட்டம் தொடர்ந்தது. 2018-ஆம் ஆண்டு ஜுலை 31ஆம் தேதி கட்டி முடிக்கப்பட்டு அதே வருடம் செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி அப்போதைய இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோவிட் டோட்டோ என்பவரால் இந்த சிலை திறந்து வைக்கப்பட்டது. சிலையை அமைப்பதற்கான கற்கள் கிரேன்களின் அதிகபட்ச சுமையை தாங்கும் வகையில் 1500 சிறிய துண்டுகளாக வெட்டப்பட்டு பின்னர் ஒன்றின் மீது ஒன்றாக அடக்கப்பட்டு இந்த பிரம்மாண்ட கருட விஷ்ணு சிற்பம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த சிலையானது 21 அடுக்குமாடி கட்டிடத்தின் உயரத்திற்கு ஒப்பானது. இந்த சிலையில் கான்கிரீட் கலவை செம்பு,பித்தளை, துருப்பிடிக்காத V/F சட்டகம் போன்றவை பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. கருடனின் மீது அமர்ந்திருக்கும் விஷ்ணுவின் தலையில் உள்ள கிரீடத்திற்கு தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. சிலையை அலங்கரிக்கும் வகையில் பிரத்தியேக விளக்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இந்த சிலை அமெரிக்காவில் உள்ள சுதந்திரதேவி சிலையை விட சுமார் 30 மீட்டர் உயரம் கொண்டதாகும். இந்த சிலையை அமைக்க சுமார் 100 மில்லியன் அமெரிக்க டாலர் செலவாகி இருக்கிறது.

# டிரம்பிற்கு எதிராக உலகம்:

பெல்ஜியத்தில் தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புகள், பெண்ணியவாதிகள் மற்றும் இனவெறி எதிர்ப்பு ஆர்வலர்கள் டிரம்பின் திட்டங்களுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டனர்.டிரம்ப் அமெரிக்க கோடீஸ்வரர்களுக்கு சேவை செய்யும் தீவிர வலதுசாரி என்றும் அவர்கள் குற்றம் சாட்டி உள்ளனர். இவ்வாறு டிரம்பிற்கு எதிராக உலகமெங்கும் பாரிய போராட்டமும் எதிர்ப்பு குரல்களும் எழுந்துள்ளன.

## அமெரிக்க மக்களின் எழுச்சி:

தற்போது அமெரிக்காவில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் ஏனையவர்களும்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உந்துதலை வெளிப்படுத்தும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அமெரிக்க மக்களை எழுச்சியடைய செய்வதே இதன் நோக்கம் என இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பலர் தெரிவித்தனர்.இந்நிலையில் டிரம்ப் தன்னை எதிர்ப்பவர்களிற்கு எதிராக ஆக்ரோசமாகவும், வன்முறை போக்குடனும் நடந்து கொண்டுள்ளதால் பலர் தங்கள் எதிர்ப்புகளை வெளியிட தயங்குகின்றனர் எனவும் பலர் தெரிவித்தனர்.

டிரம்பிற்கு எதிராக குரல் கொடுக்கின்றோம் என்பதை மௌனமாக உள்ள அமெரிக்கர்கள் பார்க்கவேண்டும் என்பதே இந்த ஆர்ப்பாட்டங்களின் நோக்கம் என தெரிவித்தனர். இந்த துணிச்சலை பார்க்கும்போது டிரம்பை எதிர்ப்பதற்கு அமெரிக்க மக்களும் துணிவார்கள் என்று கூறப்படுகிறது.

மேலும் அமெரிக்காவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளதாக ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்த மூவ்ஒன் அமைப்பினை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.அத்துடன் அமெரிக்க அதிபர் டிரம்பின் முன்னால் மண்டியிட தயாராகவுள்ள மக்களிற்கும் ஸ்தாபனங்களிற்கும் அதனை எதிர்ப்பதற்கான மக்கள் இயக்கம் உள்ளது என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகின்றோம் என ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நமது அரசியல் தலைவர்களிற்கு டிரம்பின் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கான துணிச்சல் உள்ளது என்றால் அவர்கள் அதற்கு தயாராகயிருந்தால், நாங்கள் அவர்களின் பின்னால் நிற்போம், என தெரிவித்துள்ள அவர் அரசியல் தலைவர்கள் ஜனநாயகத்தினை பாதுகாக்க வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





பெண்களின் பாரிய பிரச்சினைகள்

# ஆணுடைய பலவீனத்தைச் சாதகமாகப் பயன்படுத்துகின்ற பெண்களும் உண்டு!

பெண்களின் பாரிய பிரச்சினைகளைத் தொடர்ச்சியாகப் பார்க்கின்றோம். சென்ற மாதம் பெண்களுக்குப் பெண்களே பிரச்சினை என்றும் ஆண்பிள்ளைகளில் அதீத பாசம் வைத்திருக்கின்ற தாய்மாரினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களைப் பற்றியும் பார்த்தோம்.

இன்று ஆண்களால் பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினை பற்றியும் இன்று ஆராயலாம் என்று இருக்கின்றேன்.

உலகத்தில் பெண்களுக்குப் பிரச்சினை எல்லாம் ஆண்களாலேதான் வருகின்றது. ஆண்களே பிரச்சினைதான் என்று கூறுகின்ற இளந்தலைமுறைப் பெண்களைத்தான் நாம் அதிகமாகக் காண்கின்றோம். ஆண்களே இல்லாத உலகில் வாழ வேண்டும் என்று கூறுகின்றார்கள். ஜெர்மனியிலே ஒன்றுவிட்ட ஒருநாளுக்கு ஒரு பெண் இறப்பதற்கு ஆண் காரணமாகின்றான் என்று புள்ளிவிபரம் கூறுகின்றது. பெண்களைக் கற்பழித்துக் கொலை செய்தல், தற்கொலைக்குத் தூண்டுல், ஆத்திரம் கொண்டு அடித்துத் துன்புறுத்திக் கொலை செய்தல் என்று பல காரணங்களால் உலகநாடுகளில் பெண்கள் இறக்கின்றார்கள். பெண்ணின் முள்ளந்தண்டை உடைத்து படுக்கையில் போட்டு வைக்கும் ஆண்களின் மிருகக் குணத்தையும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இயல்பாகவே வேட்டைக் குணம் கொண்ட ஆடவர்கள், யுகம் யுகமாகத் தொடருகின்ற மரபணுக்களைத் தாங்கி வருவதனால், தம்முடைய கோபம், ஆத்திரம் என்னும் குணத்திலிருந்து விடுபட முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

பெண்கள் சில இடங்களில் பேசுவதற்கு ஆசைப்பட்டாலும் பேச்சு சுதந்திரம் கிடைப்பதில்லை. ஏன் வீடுகளில் எத்தனை பெண்கள் தாம் விரும்பியதைப் பேசக்கூடியதாக இருக்கின்றது. உனக்கு ஒன்றும் தெரியாது. பேசாமல் போ என்றுதான் பல வீடுகளில் பெண்கள் நிலைமை இருக்கின்றது. பேச்சு உரிமை கிடைக்கின்ற போது கூட சில சந்தர்ப்பங்களில் ஊமையாகி விடுகின்றார்கள். பொருத்தமில்லாத துணையைப் பணம் இருந்தால் வாழ்வு இனிக்கும் என்று திருமணம் செய்து கொடுத்துவிடுகின்றார்கள். இதனாலேயே பெண்ணும் ஆணும் இணைந்து சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமை இல்லாமல் போகின்றது.

**செங்கமல வாள்விழியாட்**
**சேர்க்கக் கருதுமுவன்**
**மங்கை தனக்கேற்ற**
**மணவாளனோ புகலாய்**

**நங்கை நிலைக்கேற்க**
**நடக்கவலனோ புவியில்**
**கொங்குமலர் மாலை**
**குரங்கிற் களிப்பாரா**
**கோதையிட மிம்மாற்றங்**
**கூறுதியாற் பைங்கிளியே**

என்று கிளியிடம் தூது சொல்லி வருமாறு தலைவியிடம் அனுப்புவதாக இப்பாடல் அமைகின்றது.

பணத்துக்காகப் பெண்களைப் பேதையர்க்குத் திருமணம் செய்து கொடுத்து மண்ணில் அவர்கள் வாழுகின்ற காலமெல்லாம் வருந்தித் துன்புறுவதற்கு புலியின் வாயில் மானைக் கொடுக்கும் தந்தையர்கள் நரகத்திற்குரியவர்கள் என்றும் கூட்டுக்குள் கிளியை அடைத்து வைப்பது போல் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்து பூட்டித் திறக்கும் பொருளாகப் பெண்ணை நினைக்கின்றார்கள். உண்பதும், உறங்குவதும், ஊர்க்கதைகள் பேசுவதும் பெண்கள் தொழில், பெண்களுக்குத் தமது கணவனே கடவுள், பெண்களுக்கும் அடிமைகளுக்கும் வேறுபாடு இல்லை என்று உளமார எண்ணுகின்றார்கள். ஆனால், பெண்கள் இல்லாவிட்டால் வீடு ஒரு காடாகும். பெண்கள் இருந்தால் காடும் ஒரு வளம்பொருந்திய வீடாகும். ஆனால் பெண்களோ இந்த உலகத்தில் வருந்துகின்றார்கள் என்பதை தத்தைவிடு தூதிலே சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.



கௌசி சிவபாலன்
(யேர்மனி)

**மாதரார் தாமிலரேல்**
**மனையும் வனமா நல்**
**மாதரார் தாமுளரேல்**
**வனமும் வளமனையாம்**
**மாதரன்றோவிவ் வாழ்விற்**
**கருங்கலமாம் மாதரன்றோ**
**வருந்துலரிம் மாநிலத்தில்**
**மாது சிரோன் மணிக்கிவை நீ**
**வகுப்பாய் பசுங்கிளியே**

ஆனாலும் தற்காலத்தை எடுத்துப் பார்க்கின்ற போது அது எதிர்மாறாக நடப்பதையும் அவதானிக்க் கூடியதாக இருக்கின்றது.

## ஆணுடைய பலவீனத்தைச் சாதகமாகப் பயன்படுத்துகின்ற பெண்கள்:

ஆணுடைய பலவீனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்ற பெண் வர்க்கம் அவர்களை அடக்கி ஆள்வதையும் நாம் புலம்பெயர்ந்த மண்ணிலே அறியக்கூடியதாக இருக்கின்றது. பெண்ணின் பெருமைகள் எவ்வளவு இருந்தாலும் ஆண்களின் நிலைமையையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதனையே நான் வெற்றிமணியில் கத்தியின்றி இரத்தமின்றிக் கொலை என்று எழுதியிருக்கின்றேன். தற்கால ஆய்வுகளின் படி ஆண்கள் நீண்ட பயணத்தை மேற்கொள்வதாலும், அதிகமாகப் பெண்களைத் தங்கி வாழ்வதாலும், பெண்களுக்கு அடங்கிப் பின்னே செல்வதாலும் ஆண்களுக்கு ஆண்மையைக் கொடுக்கின்ற ரெஸ்ரோஸ்ரிரோன் (Testosterone) என்னும் ஹோர்மோன் குறைவாகச் சுரப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் தற்காலத்தில் ஆண்களின் வலிமை குறைந்த தோற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் திரைப்படங்களில் ஆண்களை தீவிர வீரர்களாகக் காட்ட முற்படுகின்றார்கள். அதனையும் மீறி நயன்தாரா, திரிஷா, சமந்தா போன்ற கதாபாத்திரங்கள் பெண்மையின் வீரத்தை எடுத்துக்காட்டும் வகையில் திரையில் தோன்றுகின்றார்கள். இவர்களை விடச் சிறப்பாக மாவல் (Marvel) போன்ற அமெரிக்க திரைப்படங்கள், ஹிந்தி, கொரியா திரைப்படங்கள் பெண்களின்

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

# மனதில் பட்டதை மேடையில் பகிரங்கப் படுத்தும் ரவிமாஸ்ரரின் பக்குவம் எனக்குப் பிடித்திருக்கிறது



பொன். புத்திசிகாமணி
(யேர்மனி)

அன்புச் சகோதரனே! 29.03.2025 உங்கள் மணிவிழாவில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை, ஆனாலும் இதயபூர்வமான வாழ்த்து களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கொஞ்சம் சதை,குள்ளமான அத்தத் தோற்றம்,கும்பலாக அடர்த்தியான தலை மயிர்,கண்ணனின் கருமை.இன்னும் தான் என்மனக்கண்ணில் நிற்கிறது. முதல் முதலில் உங்களை நான் பார்த்தது. டோட்முண்டில். ஒரு கலை நிகழ்வில் இருவரும் சந்தித்தோம், அப்போது நடைபெற்ற கவியரங்கில் ஒரு கவிதை வாசித்தேன். அரங்கில் தொகுப்பாளராகி புகழ்ந்து தள்ளினீர்கள். என்னைப் பற்றி அன்றைய அறிமுகம் இன்று வரை தொடர்கிறது.தூண்டில் பார்த்தி பன் அவர்களின் நிகழ்வொன்றிலும் கலந்து நிகழ்ச்சி செய்த போதும் சந்தித்து மகிழ்ந்தோம். அந்தக் காலத்தில் என்மீது அவ்வளவு மரியாதை வைத்திருந்தீர்கள்.

இது ஒரு சகோதரனாக இருந்தது. பின்னாளில் கொஞ்சம் நட்போடு சேர்ந்தது. எனக்கு அதில் மனநிறைவே இருந்தது. இளையவர்கள் எங்களை தங்கள் வயதோடு ஒப்பிட்டுக்கதைக்கும் போது மனம்சந்தோசமடையும்,எங்களையும் இளையவர்களாக நினைக்கத் தோன்றும்.

எங்கும் எதிலும் ரவிமாஸ்ரர் இருப்பார். விதவிதமான தோற்றத்தில்.கடுகடுப்பிருக்கும்,கோபம் கலந்திருக்கும்,கலகலப்பிருக்கும், நகைச்சுவையும் கலந்து வரும். அப்போதெல்லாம் நான் நன்றாக ரசித்திருக்கிறேன். கொதித்து தள்ளும் ரவிமாஸ்ரரை பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறேன். உடனேயே குளிர்ந்த நீரோடையாக மாறிய ரவிமாஸ்ரையும் பார்த்து வியந்திருக்கிறேன். மனதில் பட்டதை மேடையில் பகிரங்கப் படுத்தும் பக்குவம் எனக்குப் பிடித்திருக்கிறது. இனிமேல் இந்த மனிதர் அவருடன் கதைக்க மாட்டார் என்று நினைப்பதுண்டு. ரவி அந்த வேடத்தில்,மாத்திரம் அப்படித்தான்.பல சந்தர்ப்பங்கள் இதற்கு உதாரணமாக அமைந்திருக்கிறது. வானொலியில் ஒரு நிகழ்ச்சியை எடுத்துச் செய்யும்படி எவ்வளவு தடவைகள் என்னை வற்புறுத்தினீர்கள், நான் தான் சோம்பலில் மறுத்திருக்கிறேன். சொன்ன நேரத்தில் செய்திருந்தால் எங்கேயோ போயிருக்கலாம். நன்றி ரவி மாஸ்ரர்.

உங்கள் மணிவிழாவில். "வெற்றிமணி" ஆசிரியர் தலைமை தாங்குகிறார். அந்த மணியின் சத்தம் இன்று சங்கீதமாக ஒலிக்கும். அவரைப் பெருமைப் படுத்த நீங்கள் அவரது விழாக்களில் பங்கு பற்றி மகிழ் வித்தீர்கள். இன்று அவர் உங்களைப் பெருமைப் படுத்தி மகிழ்விக்கிறார். இதனால் நானும் மகிழ்கிறேன். ஐரோப்பிய வானொலி அதிபர், அகரம்,அகரதீபம் சஞ்சிகைகளின் பிரதம ஆசிரியர் என்ற பெருமைக் குரியவர் நீங்கள். இந்தப் பெருமை உங்கள் உழைப்பிற்குக் கிடைத்தது. யாரையும் பகையாக நினைக்காத பண்பு எனக்குப் பிடித்திருக்கிறது.

ஒரு சின்ன மனிதர்,ஆனாலும் சிறந்த சேவையாளன்.என்றும் வாழ்வில் உயர்வு கிடைக்க ஒரு சகோதரனாக உளமார வாழ்த்துகிறேன்.





# உடல் கடிகாரம்

**ஏன்** இந்த எண்ணங்கள் அறுபது வயதின் பின் ஏற்படுகிறது? அதற்கு காரணம் வாழும் ஆசை மட்டும் தான். ஐம்பது அறுபது வயதானவுடன் ஐயையோ வயதாகிவிட்டதே, நோய்கள் வந்துவிடுமோ, எழுபது வயதுக்குமேல் இருப்போமா? சாகப்போகிறோமே எனும் எண்ண அலைகள் ஓட வெளிக்கிடும்.

நான் சொல்லும் எண்ண அலைகள் இந்தக் கால தைரியசாலிகள் மனதில் அல்ல. எங்கள் கால தெய்வங்கள் மனதில் மட்டுமே. அதுகூட சில பலவீனப்பட்டவர்களிடம் மட்டுமே. இந்த எண்ணத்தைத்தான் உடல் கடிகாரம் (Bioclock) என்பார்கள். எழுபது வயதானாலே ஏதோ வாழ்வு முடிந்துவிட்டதாக எண்ணுவது. இப்படி எண்ணியே சிலர் எழுபது வயதுக்குள் இறந்துவிடுவார்கள்.




எங்கள் பெற்றோர் காலங்களில் வாழ்வின் வயது எல்லை அறுபது அறுபத்தைந்து தான். தப்பினால் எழுபது வயது. பல தடவை நான் என் மனதுக்குள் கேட்டுள்ளேன். “எமது நாட்டில் எமது முன்னோர்கள் அறுபத்தைந்து எழுபது வயதுக்குள் இறந்துவிடுகிறார்களே, அப்படியானால் நாங்களும் அப்படியா?“ என்று. ஆனால் அதன் உண்மை வேறு.

நாட்டில் உள்ளவர்கள் தங்கள் உடம்பை வைத்தியர்களிடம் சென்று காட்டுவது குறைவு. மேலை நாடுகளில் அப்படி இல்லை. மூன்று மாதத்துக்கு ஒருமுறை உடல் பரிசோதனைகள் செய்து கொண்டு இருப்பார்கள். சில பல குறைகளையும் சரிபடுத்துவார்கள். மேலை நாடுகளில் வைத்திய வசதிகள் அதிகம். இதுதான் முதல் காரணம் முதுமையிலும் சுகதேகிகளாக வாழ்வதற்கு. ஆனாலும் இந்த காலத்தில் நமது தாய்நாடு உட்பட எல்லா நாட்டிலும் எல்லோரும் சுகதேகிகளாகவே இருக்கிறார்கள்.

விடிகாலை ஐந்து மணிக்கு நித்திரைவிட்டு எழும்ப வேண்டும் என்று கடிகாரத்தில் அலாரம் வைத்து படுப்போம். ஆனால் அலாரம் அடிக்குமுன்பே நாங்கள் நித்திரையிலிருந்து விழித்து எழுந்தும் விடுவோம். எங்கள் எண்ண ஓட்டங்கள் எங்களை விழிப்படைய செய்து விடும். இதைத்தான் உடல் கடிகாரம் என்பார்கள்.

அப்போ யோசித்துப் பாருங்கள் மக்களே, ஐம்பது அறுபது வயதில் வயோதிபத்தையும் இறப்பையும் யோசித்தால் எங்களுக்கு அதே வயதில் நோய்கள் வரத் தொடங்குமா தொடங்காதா? தொடங்கும். அதுவும் என்ன நோய்? இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கொழுப்பு இவையெல்லாம் வேண்டா விருந்தாளிகளாக உடலில் வந்து ஒட்டிக் கொள்ளுவார்கள். இவையெல்லாம் நோயா? யார் சொன்னது?

இளம் வயதினரோ வயோதிபர்களோ கூடி பேசும்போதெல்லாம் சிலர் எனக்கு சர்க்கரை நோய் , எனக்கு இரத்த அழுத்தம், எனக்கு கொழுப்பு என்றெல்லாம் பேசுவார்கள். சீனி சாப்பாட்டை அளவுக்கு அதிகமாக சாப்பிட்ட படியால்தானே அதே சீனி எங்கள் உடம்பில் போய் இரத்தத்தில் கலக்கிறது. அதேபோல் கொழுப்பும் உடலில் சேரும். உலகத்தில் உள்ள வேதனையெல்லாம் நான்தான் அனுபவிக்க வேண்டும். என் பிள்ளைகளை படிப்பிப்பேன், நல்ல நிலைக்கு கொண்டுவருவேன். அதனால் அவர்கள் சின்னவர்களாக இருக்கும்போதே அவர்களுக்காக நேரம் காலமின்றி ஓடி ஓடி உழைப்பேன். டென்ஸன் டென்ஸன். அப்போ இரத்த அழுத்தம் ஏற்படாதா?

அதையும்விட இவையெல்லாம் பரம்பரை நோய்களாக வைத்தியர்கள் சொல்லிவிடுவார்கள். ஏன் எங்கள் பெற்றோரும் இதே செயலை பின்பற்றிதானே எங்களை இந்நிலைக்கு கொண்டு வந்தார்கள். அதனால்தான் நோய்கள் அவர்களுக்கும் ஏற்பட்டது. அது பரம்பரை நோயாகியது.

இவையெல்லாம் நோயே இல்லை என்பதை புரிந்து அதன் வழி நடந்தாலே இந்த உடல் கடிகாரத்தை உடம்பிலிருந்து தூக்கி எறிந்துவிடலாம். நாங்கள் உண்மை ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். மனநிலை சரி இல்லா தவர்கள், குழந்தை உள்ளம் கொண்டவர்களுக்கு இந்த எண்ணங்கள் தோன்றாது இல்லையா? அவர்கள் உடலில் கடிகாரமே இருக்காது.



பாக்குப் பாட்டி (யேர்மனி)

யப்பான், சீனா மக்கள் எல்லோரும் நூறு வயதுக்கு மேல் வாழ்வார்கள். காரணம் நூறு வயதானாலும் தங்கள் வேலையை தாங்களே செய்வார்கள். வெளியே செல்லும்போது அநேகமானவர்கள் மிதிவண்டியே பாவிப்பார்கள். சிற்றுந்து பாவனையே குறைவு. தோட்ட வேலையெல்லாம் வயோதிபரே பார்ப்பார்கள். அவர்கள் அப்படி வாழ்வதற்கு அவர்கள் மனநிலையே காரணம்.

ஆனால் எங்கள் மக்களுக்கோ, எழுபது வயதுக்கு முன்பே வேலைகள் செய்வதற்கு ஒரு உதவியாள். நடையில் ஒரு தள்ளாட்டம். வீட்டில் குஷியாக இருந்து தொலைக்காட்சி பார்ப்பதற்கு ஒரு குஷி இருக்கை. நடந்தால் நாரி நோ, முழங்காலில் சில்லு தேய்வனவு, கால் உளைவு. இருந்தால் எழுந்து நிற்க முடியாது. பக்கத்தில் நாளாந்தம் உடம்புக்குள் அனுப்பும் மாத்திரைகள் நிரம்பிய பெட்டி. எங்களை நாங்களே அனுப்ப உடல் கடிகாரத்தை பக்கத்திலே வைத்திருப்போம்.



ஏன் நாங்கள் யப்பான் சீன மக்களாக மாறக்கூடாது? நடந்து திரிவதைவிட்டு ஓடிப் பார்க்கலாம். அழகான உடை அழகாரங்கள், முக அழகாரங்கள், தலைமுடி அழகாரங்கள் செய்து நாங்கள் இளமையானவர்கள் என்ற எண்ணங்களை நாங்களே எங்களுக்குள் கொண்டுவரலாம்.

வாகனங்களில் சென்று தரிப்பிடங்களைத் தூரங்களில் செய்துவிட்டு செல்ல வேண்டிய இடத்துக்கு நடந்து செல்லலாம். மாத்திரை பெட்டிகளை எறிந்துவிட்டு அளவான ஆரோக்கியமான உணவு, தேகப் பயிற்சிகள் செய்து எந்த நோய்களும் எங்களை அண்டாதபடி வாழலாம். வகை வகையான உணவுகளை செய்து பார்க்கலாம். (சும்மா சொல்லக்கூடாது, சமையல் விடயத்தில் எங்களை அடிக்க ஆள் இல்லை.)

சுறுசுறுப்பாக இருப்போம். வாசித்தல், பேசுதல், பார்த்தல், கேட்டல் போன்ற பயிற்சிகளை அளவுக்கு அதிகமாக்கி நினைவாற்றலை ஊக்குவிப்போம். என்ன செய்வது? நானே அதிக நாளாக அந்த கடிகாரத்தை உடம்புக்குள் வைத்துக்கொண்டுதான் திரிந்து இருக்கேன். இப்ப ஒரு வருசத்துக்கு முன்னாடிதான் எறிஞ்சேன். அதுதான் எல்லோரும் சொல்லுவார்கள், எதிர்மறையான எண்ணங்களை தூக்கி எறிந்துவிட்டு நேர்மறையான எண்ணங்களை வளர்த்தால் அது அப்படியே நடக்கும் என்று. எல்லாம் பட்டுத்தான் திருந்த வேணும் போல.

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

# யேர்மனியில் சிறப்பாக இடம் பெற்ற 'இதழியல் கலை வேள்' த.இரவீந்திரனின் மணிவிழா








நிருத்திய நாட்டியாலய மாணவிகள்



சலங்கை ஒலி நாட்டியப் பள்ளி மாணவிகள்



ஆடற்கலாலய மாணவர்கள்



நோபனா நாட்டியக் கலாலயம்

ETR வானொலி, அதிபர், அகரம் சஞ்சிகை, அகரதீபம் சஞ்சிகை ஆசிரியர் இதழியல் கலை வேள் த.இரவீந்திரன் அவர்களின் மணிவிழா யேர்மனியில் கம் காமாட்சி அம்மன் ஆலயம் கலாச்சார மண்டபத்தில் 29.03.2025 வெற்றி மணி பத்திரிகை ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் தலைமையில் மிகச்சிறப்பாக இடம் பெற்றது.

மங்கலவிளக்கேற்றல், தேவாரம், அகவணக்கம் இடம் பெற்றன. கம் காமாட்சி அம்மன் ஆலய குரு பிரதிஷ்ட கலாநிதி பாஸ்கரக்குருக்கள், துர்கா துரந்தரர் சுவற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலய குரு ஜெயந்திநாதகுருக்கள் ஆகியோரின் நல்லாசியுடன் உரைகள் ஆரம்பமாகின. கனடாவிலிருந்து கௌரி மனோகரன் சுவிஸ்சிலிருந்து சன் தவராசா சிவச்செல்வம் கிருஸ்ணா அம்பலவாணர் பொலிகை ஜெயா கரோலின்(பாடகி),நெதர்லாந்திலிருந்து ஜெயன் (பாடகர்) சுபா சசி, இங்கிலாந்து நடா மோகன் பிரான்சிலிருந்து மகேஸ்வரி இவ்வாறு பல நாடுகளில் இருந்தும் பல ஊடக நண்பர்களும், கலந்து சிறப்பித்தனர்.

யேர்மனியில் உள்ள ஊடகங்கள் பலவும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை ஒரு ஆரோக்கியமான நிகழ்வுக்கு வித்திட்டன. ஒவ்வொரு பேச்சாளரும் ஒன்றையே திருப்பி திருப்பி ஒப்புவிக்காமல். இதழியல் காலை வேள் த. இரவீந்திரன் அவர்களின் தாம் அறிந்த ஒவ்வொரு பக்கங்களை அங்கு எடுத்துவந்து இயம்பியது சிறப்பான அனுபவத்தை தந்தது. நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள் இடை, இடையே வந்து நிகழ்ச்சிப்போக்கின் இறுக்கத்தை தவிர்த்தன.இதனை கச்சிதமாக நெறிப்படுத்திய ஈழமயூரன் அவர்களுக்கு எமது பாட்டுக்கள்.

வெற்றிமணி தயாரித்து வழங்கிய சிறு ஆவணப்படம் நனவிடை தோய்தல் சிறப்பாக காண்பிக்கப்பட்டதுடன், வெற்றிமணி 2025 விருதும், இதழில் கலை வேள் என்ற பட்டத்தினையும் வழங்கி கௌரவித்தனர். மேலும் யேர்மனியில் உள்ள பல கலை, இலக்கிய அமைப்புகளும் இதழில் கலை வேள் த. இரவீந்திரன் அவர்களை மேடையில் கௌரவித்து மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சிகளை சி.சக்திவேல், தேவன் ஆகியோர் சிறப்பாக தொகுத்து வழங்கினர். திரு. இரவீந்திரன் 2004 ஆண்டு யேர்மனியில் ஏன் நாம் வாழும் இடத்தில் ஒரு வானொலி உதித்தால் என்ன என்ற எண்ணத்தில், ஐரோப்பிய தமிழ் வானொலி ஐ ஆரம்பித்தார். நாளடைவில் முதலாவது 24 மணிநேர வானொலி யாக மிளிர ஆரம்பித்தது.ஐரோப்பா தேசம் எங்கும் மக்கள் விரும்பிக்கேட்கும் வானொலிகளில் முக்கிய இடத்தில் (ETR) ஐரோப்பிய தமிழ் வானொலியும் இருந்தது. குறிப்பாக இங்கிலாந்தில் முதியவர்களின் செல்லப்பிள்ளையாக ரவிந்திரன் இருந்ததை அன்று பல முதியோர் இல்லங்களுக்கு செல்லும்போது அறிய முடிந்தது.

2011ம் ஆண்டு அகரம் சஞ்சிகை தாய்மண்ணின் அரசியல் நகர்வுகளை சிறப்பாக எடுத்து வந்தது. பல துறைகளில் கால் பதித்து வளர்ந்து வரும் இதழியல் கலை வேள் த. இரவீந்திரன் அவர்களை நாமும் வாழ்த்துவோம்

படங்கள்: நந்தபாலன்





Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540




# யேர்மனியில் சிறப்பாக இடம் பெற்ற 'இதழியல் கலை வேள்' த.இரவீந்திரனின் மணிவிழா














# யேர்மனியில் தேர்க்காலம் 2025

தொகுப்பு: ஆன்மிகத்தென்றல்
த.புவனேந்திரன் (யேர்மனி)

**யூச்சின் சிறி நவசக்தி விநாயகர் ஆலயம்**
கொடி : 17.05.2025
தேர் : 25.05.2025
Hoch Str 10.b 41363
Jüchen. 02164 70 20 944



**வூப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி : 23.05.2025
தேர் : 31.05.2025
Hünefeld Str 63b; 42282 Wuppertal.
0202 479 60 17.

**சுவெற்றா கனகதுர்க்காஅம்பாள் ஆலயம்**
கொடி : 19.07.2025
தேர் : 27.07.2025
Beckenkamp 7 ; 58239 Schwerte.
023 04 16721.

அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

# கனடா- மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணையில் முருங்கை பதனிடும் ஆலை திறப்பு

**இதுவரை 2,000 க்கும் மேற்பட்ட முருங்கை மரங்கள்**





## Made in Mullaitivu
## உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்போம்

கனடிய தமிழர் பேரவை (CTC) மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையம் (NEED Centre) இணைந்து 2025 பிப்ரவரி 27,மட்டக்களப்பில் முருங்கை பதனிடும் ஆலையை திறந்து வைத்துள்ளது. இது கனடா-மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணையின்-கைல் டி.ராஜா திட்டத்தின் இரண்டாம் கட்டமாக செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்த புதிய வசதி மட்டக்களப்பு மாவட்டத்தின் வேளாண்மை துறையை வலுப்படுத்துவதோடு, முருங்கை உற்பத்தியை அதிகரித்து உள்ளூர் விவசாயிகளுக்கு அதிகமான பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க உதவும்.

2024 பிப்ரவரியில் திறக்கப்பட்ட கனடா-மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணை - கைல் டி. ராஜா திட்டம் தற்போது கணிசமான வளர்ச்சி கண்டுள்ளது. இதுவரை 2,000-க்கும் மேற்பட்ட முருங்கை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதன் மூலம் முருங்கை உற்பத்தி உயர்ந்துள்ளதுடன், பலருக்கு வேலைவாய்ப்புகளும் உருவாகியுள்ளது. முருங்கை ஊட்டச்சத்து மிகுந்ததும் வர்த்தக ரீதியாக அதிக மதிப்புள்ளதுமான ஒரு பயிராக இருப்பதால், இந்த இரண்டாம் கட்டமாக முருங்கை இலையை பதனிடும் ஆலை அமைக்கப்பட்டுள்ளது. 2025 பிப்ரவரி 27 அன்று நடைபெற்ற இந்த புதிய பதனிடும் ஆலையின் திறப்பு விழா பாரம்பரிய தமிழ் வரவேற்புடன் நடைபெற்றிருந்தது. விழாவின் முக்கிய நிகழ்வாக, CTC நிர்வாக இயக்குநர் டாண்டன் துரைராஜா, மூத்த உதவி அரசாங்க அதிபர் திருமதி முகுந்தன், NEED மையத்தலைவர் யோகேஸ்வரன் மயில்வாகனம், முன்னாள் மட்டக்களப்பு மேயர் சரவணபவன் தியாகராஜா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தின் உதவியாளர் விமலநாதன் மதிமேனன் ஆகியோர் இணைந்து முருங்கை பதனிடும் ஆலையை திறந்து வைத்தனர். இந்த திட்டம் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என பலரும் பாராட்டினார். முருங்கை தூள் தயாரிப்பு அதிகரிக் கப்படுவதன் மூலம், சர்வதேச சந்தையில் தமிழ் விவசாயிகள்






தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும்.

கனடிய தமிழர் பேரவையின் உதவியுடன் வடக்கு கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையம் நடத்திவரும் “Made in Mullaitivu உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்போம்” காட்சியறை முல்லைத்தீவு புதிய பேரூந்து நிலையத்திற்கு அருகாமையில் இயங்கிவருகின்றது.





28 ஆம் பக்கம் பார்க்க...




**19 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

**திருமதி ஞானேஸ்வரி சிவஞானசுந்தரம்**

**தோற்றம் : 25.09.1942**
**மறைவு : 09.05.2006**

பத்தொன்பது ஆண்டுகள் சென்றாலும் தினம்
உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே
அம்மா என்றும் அன்பே என்றும்
சொல்ல நீயில்லை!
உன் நினைவால் வாடி வதங்குகின்றோம்
இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள்
இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன
நினைவெல்லாம் நீயே தாயே!

என்றும் உன்னை மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: சு.சிவஞானசுந்தரம் +49 172 9564 429

**காணி விற்பனைக்கு உண்டு**

வரணி சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு அருகில் 45 பரப்பு, மற்றும் 28 பரப்பு தென்னம் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
வட்சப் இலக்கம்: +1 416 471 3353


அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

# இன்று வீழ்த்தவென்றே எழுப்பப்படும் சிக்கல்களை வீழ்த்துவோம்

வாழ்க்கை என்பது சோதனைகளால் நிரம்பிய ஓர் பயணமாகும். இந்தப் பயணத்தில் நாம் சந்திக்கும் சிக்கல்கள் பலவகையானவை. சில சிக்கல்கள் வாழ்க்கையில் இயற்கையாகவே வருவதுண்டு.ஆனால், சில சிக்கல்கள் நம்மைப் பிடிக்காதவர்களால் திட்டமிட்டு உருவாக்கப்படுபவை. நம் வளர்ச்சியை தடுக்க, நம் உளவலிமையைச் சோதிக்க, நம்மை வீழ்த்தவென்றே நம்மைச் சூழ்ந்திருக்கும் மனிதர்களால் உருவாக்கப்படும் சிக்கல்கள் இவை.



இவை மிகவும் நுணுக்கமானவை் யாரால் எப்படியென உணர முடியாமல் நம்மைச் சிதைக்கக்கூடியவை. எனவே இவற்றைச் சிந்தையோடும், துணிவோடும், ஞானத்தோடும்,சரியான அணுகுமுறையோடும் கையாளத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒருவரின் முன்னேற்றம் மற்றவர்களுக்கு ஏற்படுத்தும் அச்சம் பலவகையில் இடையூறாக உருவெடுக்கின்றது. ஒருவரின் திறமை, சாதனை, நேர்மை, அன்பு, புகழ் அனைத்தும் சிலருக்குப் பொறாமையாக இருக்கலாம். இதனால், அவர்கள் திட்டமிட்டு சிக்கல்களை உருவாக்கித் தம் வயிற்றெரிச்சலைத் தணித்துக்கொள்கின்றனர். வேலைத்தளத்தில் தொல்லை, குடும்பத்தில் விரோத உறவுகள், சமூகத்தில் அவதூறுகள் என இவையெல்லாம் சிக்கல்களுக்கான அடையாளங்களாக அமைகின்றன. நம்மை வீழ்த்தவென்று எழுப்பப்படும் சிக்கல்கள் நேரடியாக வருவதில்லை. அவை விமர்சனங்களாக, குற்றச்சாட்டுகளாக, தவறான தகவல்களாக, திட்டமிட்ட தாமதங்களாக, சிந்தனையளவிலான தாக்குதல்களாக வரலாம். முதலில் அவை சின்னச் சின்னத் தடைகளாகத் தோன்றலாம், ஆனால் நாம் கவனிக்காமல் விட்டால், பெரும் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

## வீழ்ச்சிக்குப் பதிலாக எழுச்சியை நோக்கிப் பயணிப்பது எப்படி?

1.சிக்கல்கள் திட்டமிட்டு ஏற்படுத்தப்படும்போது, முதலில் பாதிக்கப்படுவது நம் உள அமைதி. அந்த அமைதியை நிலைகுலையாமல் தக்கவைத்துக்கொள்வது மிக முக்கியம். உள அமைதியே சிக்கல்களைச் சரியாகக் கையாள்வதற்கான வழியைக் காட்டும். பதட்டமும் கவலையும் தவறான முடிவுகளுக்கே இட்டுச் செல்லும்.

2.சிக்கல்கள் நம்மைத் தேடி வந்ததன் மூலம் பிறருக்குக் கிடைக்காத ஏதோவோர் வளர்ச்சி நம்மிடம் உள்ளது என்பதே உறுதி. இந்த உண்மைதான் நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். “சிக்கல்கள் இல்லை என்றால் வளர்ச்சியில்லை” என்பதே வாழ்க்கையின் உண்மை என நேர்மறைச் சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

3. “என்னால் இந்தச் சிக்கலைக் கடக்க முடியும்” என்ற தன்னம்பிக்கை மிக முக்கியம். தன்னம்பிக்கையோடு கூடிய கையாள்கையே அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வாகும்.

4.உண்மையை அறிந்து கொள்ளும் திறனும், அதன் அடிப்படையில் செயல்படும் தன்மையும் நம்மைச் சிக்கல்களில் இருந்து மீட்கும். எந்த நிலைமையிலும் அறிவை ஆயுதமாக்கி நியாயமான பாதையில் பயணிப்பது பாதுகாப்பானது.

5.நம்மை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாகச் சிக்கல்கள் மாறுகின்றன. ஒவ்வொரு சிக்கல்களின் மூலமாகப் புதிய பட்டறிவை நாம் பெற்றுக் கொள்ளலாம். அதனால், தன்னிறைவு, திறமை, உளநிலை ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்பாக இதைப் பயன்படுத்தலாம்.

6.சில சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு கிடையாது. நமக்கான நேரம் வரும்வரை காத்திருக்க வேண்டும். பொறுமையோடு செயல்படும் உளமிருந்தால், நமக்கானவோர் நாளில் சிக்கல்கள் காற்றில் கரைந்துவிடும்.நம்மை வீழ்த்த எண்ணுவோரின் வீண்முயற்சிகளும் உடைந்துவிடும்.

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் சிக்கல்கள் பெரும்பாலும் நம்மை வீழ்த்தவே உருவாக்கப்படுபவை. நாம் அந்த சிக்கல்களை எதிர்நோக்கி, சிந்தையோடு கையாளக்கூடியவர்களாக இருந்தால் அந்தச் சிக்கல்களே நம்மை உயர்வடையச் செய்யவல்லது. சிக்கல்களை வாய்ப்புகளாக மாற்றும் திறன் நமக்குள்ளே உள்ளது.

சீரிய சிந்தனையும் சிறந்த கையாள்கையும் சிக்கல்களை நம க்கான பக்கபலமாக மாற்றும். “என்னை வீழ்த்தச் சிக்கல்கள் வந்தாலும், நான் மேலே எழுவேன்” என்ற நம்பிக்கையுடன் நாம் முன்னேற வேண்டும். சிக்கல்களை சந்திப்பது நமது வலிமையை வெளிக்கொணரும் ஒரு வாய்ப்பு என்பதை உணர்ந்தால், எந்த எதிரியும் நம்மை வீழ்த்த முடியாது.

வலிந்து உருவாக்கப்படும் சிக்கல்களுக்கெல்லாம் உடைவோமானால் வலிகளோடே வாழ்க்கை முடிந்துவிடும். எழுந்து நடக்கும் வலிமை உண்டெனக் காட்டினால் வெற்றிகளால் வாழ்க்கை வளம்பெறும்.


BCN TRAVELS
Consulting Network.ug
inh.Rasan.Sivalingam



Canada visa, India one year, 5 years. Visa Srilanka Visa
72 மணித்தியாலத்தில் பெற்றுத் தரப்படும்
உங்கள் விமானப் பயணங்கள் என்றும் சிறப்பு விலையில்
இங்கிலாந்து (UK) விசாக்களுக்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்
MONEY TRANSFER
SriLankan Airlines
Emirates
QATAR AIRWAYS
ETIHAD AIRWAYS
Western Union Money Transfer
Ria Money Transfer & Change
Bank: conslting Network. UG
Targo bank
IBAN DE90 30020900 5330 5840 82
BIC: CMCIDEDD
bcntravels@hotmail.de
consultingnetwork@hotmail.de
Rheinische str.72-44137 Dortmund
Tel: 0231-108 763 61 | Mobile: 0163 871 43 69 | Fax: 0231 1087 6362| Web: Bcn-travels-dortmund.com


அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கனடா- மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணையில்

நம் தாயக உள்ளூர் ஊற்பத்தியாளர்களால் தரமான வகையில் உருவாக்கப்பட்ட அனைத்துவிதமான உள்ளூர் பொருட்களையும் சிறந்த விலையில் நீங்கள் இங்கு பெற்றுக்கொள்ள முடியும். தனித்துவமான நம்மக உற்பத்தியாளர்களின் உற்பத்திப்பொருட்களை வாங்குவதன் மூலமும் அவற்றை ஆதரிப்பதன் மூலமும் தாயக உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தில் மாற்றத்தையும் சிறந்த சந்தை வாய்ப்பையும் அவர்களிகு பெற்றுக் கொடுக்க முடியும். இலங்கைக்கு விஜயம் செய்யும் அனைத்து புலம்பெயர் உறவுகளையும் முல்லைத்தீவு புதிய பேரூந்து நிலையத்திற்கு அருகாமையில் உள்ள “Made in Mullaitivu உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்போம்” காட்சியறைக்கு சென்று பார்வையிடுமாறும் அங்குள்ள எம் தாயக உற்பத்திப்பொருட்களை வாங்குமாறும் அதை அனைவரிற்கும் பரிந்துரை செய்து ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.



இந்த செயற் திட்டம் எம்மவர் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் மாற்றும் வல்லமையுள்ளது. அதில் நாம் அனைவரும் ஒரு பங்கை எடுக்குக் கொள்வோம்.

எமது விடுமுறைகளை உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவும் பயன் படுத்துவோம். கைகொடுக்கும் உறவுகளுக்கு எமது வாழ்த்துகள்.

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பிரபஞ்சம் உண்மையில்

இந்த ஹோட்டலில் 400 விருந்தினர்களுக்கான அறைகள், பார்க்கும் தளங்கள், ஒரு சினிமா, ஒரு ஸ்பா, ஒரு உடற்பயிற்சி கூடம் மற்றும் பல உள்ளன.

இது செயற்கை ஈர்ப்பு விசையை உருவாக்க சுழலும், (It will also spin to create artificial gravity, simulating about a sixth of Earth's gravity) பூமியின் ஈர்ப்பு விசையில் ஆறில் ஒரு பங்கை உருவகப்படுத்தும்.

அனைத்துக்குமே ஒரு விஞ்ஞானப் பதில் ஒன்று இருக்கலாம். ஆனால், அதைப் பெற நாம் நிறையக் கற்க வேண்டும், அதை விட எல்லாவற்றிற்கும் மேலாக, கேள்விகளை கேட்கத் தயங்கக்கூடாது. என்ன்...? நான் சொல்வது சரி தானே?

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பெண்களின் பாரிய பிரச்சினைகள்

அதீத வீரத்தை முன்னிலைப்படுத்தி படங்கள் எடுக்க முன்வருகின்றார்கள். ஆண்களின் அச்ச உணர்வுகளும், இயலாமையும் ஒரு சந்தர்ப்பத்தில் நிலை தடுமாறுகின்றது.

நலிவடைந்த ஆண்வர்க்கம் தவறான வழிமுறைகளைக் கையாள்வது அதிகரித்துள்ளது. பெண்களை ஏமாற்றுதல், பொய் சொல்லுதல், உண்மையை மறைத்தல், பெண்கள் அறியாமல் அவர்களை தவறான முறையில் புகைப்படங்கள் எடுத்தல், பெண்களின் படங்களை எடுத்து போட்டோசொப் மூலம் மாற்றி தவறான முறையில் சமூகவலைத் தளங்களில் இடல் போன்ற தகாத காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

மேலும் உலகம் முழுவதும் போதைப் பொருளுக்கு அடிமையாகின்ற ஆண்கள், பெண்களை மானபங்கப்படுத்தி உடல் முழுவதையும் சீரழித்து கொலை செய்கின்ற வன்முறைகள் அதிகரித்துள்ளன. பெண்களின் உறுப்புக்களினாலும், ஆடைக் குறைப்பினாலும் ஈர்க்கப்படுகின்ற காரணத்தினாலேயே ஆண்களின் வன்புணர்வு ஏற்படுகின்றது என்று குறை கூறுகின்ற மக்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகின்ற பெண்களுக்கு ஏன் அவ்வாறான வன்புணர்வு எண்ணம் தோனறுவதில்லை ஆண்களுக்கு மட்டுமே அந்த எண்ணம் ஏற்படுகின்றது என்று கேள்வி எழுப்புகின்றனர். இவ்வாறான உடற்கவர்ச்சியானது மறைத்து வைப்பதனாலேயே ஏற்படுகின்றது என்று எதிர்த்து நிற்கும் பெண்கள் தற்போது உடலின் அங்கங்கள் வெளிப்படுகின்ற ஆடைகளை அணிவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது கலாசார சீர்கேடாகப் பேசப்பட்டாலும், மனிதர்களின் ஆரம்ப காலகட்ட நிலைக்கு எம்முடைய எண்ணப் போக்கைக் கொண்டு செல்கின்றது. மேலாடைக்காக உண்ணாவிரதம் இருந்ததும் பெண்களே, மேலாடை ஆண்களுக்கு மோகத்தை ஏற்படுத்துகின்றது என்று ஆடையில்லாது, அரைகுறை ஆடையுடனும், மார்புக்கச்சையை மட்டுமே அணியத் தொடங்கியுள்ளதும் பெண்களே. அவரவர் மனநிலைக்கு ஏற்றபடி இவ்வாறான ஆடைக்கலாசாரத்தை நாம் எடுத்துக் கொள்ளலாம். திருமணம் பற்றி பெண்கள் கொண்டிருக்கின்ற கருதுகோளை அடுத்த மாதம் பார்க்கலாம்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தள்ளிப்போகும் திருமணங்களும்

திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. திருமணத்துக்கு முன்னர் “டேற்றிங்” (Dating) எனப்படும் “பேசிப் பழகிப் பொருத்தம் பார்க்கும்“ தற்கால வழக்கங்கள் அங்கீகரிக்கப்பட்ட சூழலில் இளைஞர் யுவதிகளுக்கு சமூக ஊடகங்கள் வாயிலாக பரந்துபட்ட தனி மனிதத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடிகின்றது.

இந்த வசதி உடனடியாகத் திருமணத்தை நோக்கிச் செல்லாமல் நீண்ட காலத்துக்கு ஆணும் பெண்ணும் பேசவும் பழகவும் இடமளிக்கின்றது. இந்த வாய்ப்புக்கள் இருக்கும்போது ஓர் இளம் பெண்ணுக்கோ ஆணுக்கோ தனக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் அவசரம் காட்டவேண்டிய அவசியம் இல்லாமல் போகின்றது.

### பெண்ணியக்கோட்பாடுகளின் எழுச்சி

பெண்களுக்கான சமத்துவம், சுதந்திரம் பற்றிய பெண்ணியக் கருத்துக்கள் வேகமாக வளர்ந்து வரும் காலம் இது. சமூகத்தில் பெண்களின் முக்கியத்துவமும் பங்களிப்பும் அதிகரித்து வருகின்றது. கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுதந்திர வாழ்வுக்கான பெருவிருப்பம் காரணமாகப் பல பெண்கள் தமது திருமணத்தைத் தாமதப்படுத்த விரும்புகிறார்கள். அவர்கள் முந்தைய தலைமுறைகளை விட வாழ்வாதாரம் அல்லது சமூக அங்கீகாரத்துக்காகத் திருமண பந்தத்தை நம்பியிருப்பது குறைவு. தொடரும்.

**(நன்றி.தமிழர்தகவல்)**

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## லண்டன் நரிகளின் நகரம்

குறிப்பிடுகிறார். நகர்ப்புற நரிகள் தங்கள் நாட்டு நரிகளை விட உடலியல் ரீதியாக வேறுபடத் தொடங்கியுள்ளன என்பதற்கான சில சான்றுகளும் உள்ளன, ஒரு ஆய்வு அவற்றின் மூக்குகள் சிறியதாகவும், மூளை அளவு குறைவாகவும், பாலியல் இருவகைத் தன்மை (நாய் நரிக்கும் நரிக்கும் இடையிலான உடல் வேறுபாடு) குறைவாகவும் இருப்பதைக் காட்டுகிறது. உண்மை என்னவென்றால நரிக்கு இயற்கையான வாழ்விடம் இல்லை. மனிதர்களைப் போலவே, அவை எங்கு வேண்டுமானாலும் வாழ்கின்றன.

அவற்றைப் அச்சமாக சித்தரிப்பதற்குப் பதிலாக, நாம் ஏற்கனவே காடுகளில் பல விலங்குகளை இழந்துவிட்டோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும், பின்னர் ”ஒரு படி பின்வாங்கி, நரிகள் நாம் பார்க்கக்கூடிய ஒரு அற்புதமான, அழகான வனவிலங்குகள் என்பதை நாம் பார்க்க வேண்டும்” என்று நரிகள் தொடர்பான ஆய்வாளர் ஸ்காட் கூறுகிறார். நகர்ப்புற கட்டுக்கதைகளை மறந்துவிட்டு, நகர்ப்புற நரியைப் பாருங்கள் என்கிறார் ஸ்காட். அப்போதைய மேயர் போரிஸ் ஜான்சன் லண்டன் நரிகளை “அச்சுறுத்தல்” என்று அழைத்தார். ஆனால் பிரதமர் மாளிகைக்கு முன்னாலும் மன்னரின் பக்கிங்கம் மாளிகைக்கு முன்னாலும் லண்டன் நரிகள் இரவில் சுதந்திரமாக நடமாடுவதை நான் பல இரவுகளில் கண்டிருக்கிறேன். ஆனால் லண்டன் நகரத்தோடு அவைகள் சுதந்திரமாக வாழப்பழகிவிட்டன. அவை லண்டனில்தான் தம் வாழ்க்கையை வாழ்ந்து முடிக்க வேண்டும்.

**இது எனது பக்கங்கள் பாருங்கள்**
**ண்பர்களுக்கும் சொல்லுங்கள்**

http://mnmanas.blogspot.com/
http://mnmanas.wordpress.com/






# மோடி மறந்த ‘தமிழர்கள்’

## புதுடில்லியிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் ஈழத்தமிழர் முன்னுள்ள சவாலும்

இந்திய பிரதமரின் அநுராதபுர விஜயமும், அவர் நடத்திய உரையாடல்களும் இலங்கையில் அவர் நின்ற போது நடந்த காட்சிகளும் இலங்கை – இந்திய உறவின் ஆதாரத்தை நட்புக் காரணியை மாற்றுவதாகவே அமைந்ததாகவே அவதானிக்க முடிந்தது.நீண்டகாலமாக இந்தியா – இலங்கை உறவு என்பது பண்பாட்டு உறவு, தமிழகம் மற்றும் ஈழத்தமிழர் பண்பாட்டு உறவாகவே அணுகப்பட்டு வந்திருந்தது.எனினும் நரேந்திர மோடியின் அனுராதபுர பயணம் இந்திய – இலங்கையின் பௌத்த பண்பாட்டு சுவடுகளை புதுப்பித்துள்ளது அதே வேளை, ஈழத்தமிழருடனான உறவை தள்ளிவைப்பதாக அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக மோடி இந்த விஜயத்தில் பௌத்த பண்பாட்டின் அடையாளமான புனித ஸ்ரீ மகாபோதி மரத்தில் பிரார்த்தனை செய்த அதேவேளை,பண்டைய அனுராதபுர நகரத்திற்குள் உள்ள அட்டமஸ்தானம் அல்லது எட்டு புனித தலங்களில் ஒன்றான ‘உட மலுவ’ வுக்கு விஜயம் செய்து, எட்டு பெரிய பௌத்த ஆலயங்களின் தலைமை பிக்கு மற்றும் நுவரகலவியவின் தலைமை சங்கநாயக்கர் அதி வணக்கத்திற்குரிய டாக்டர் பல்லேகம ஹேமரதன நாயக்க தேரரை சந்தித்து கலந்துரையாடினார்.

30 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையில் செல்வாக்கு செலுத்த முனைந்த இந்தியா; அதன் பின்னர் அமைதிகாக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தை தமிழர் தாயகத்தில் இறக்கி தமிழர்களை அழித்து சிங்கள மக்களையும் சிங்கள தலைவர்களையும் குளிர்வித்து அதனூடாக தான் எதிர்பார்த்த இலக்கை பூர்த்தி செய்ய நினைத்த இந்தியா அவற்றில்



தோல்வியையே சந்தித்தது.எனினும் அண்மைக்காலமாக சீன அரசு இலங்கையில் பௌத்த பண்பாட்டை முன்னிறுத்தி உறுதியான உறவை கட்டமைத்து வரும் நிலையில்,அதற்கு போட்டியாக தானும் களமிறங்க வேண்டுமென்ற தோரணையில் தன்னுடைய கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவே அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வுகூறியிருக்கிறார்கள்.

இந்த விடயங்களை வைத்து பார்க்கும்பொழுது இந்தியாவின் கொள்கையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர முடிகிறது.பூகோள அரசியல் போக்கில் –அல்லது போட்டியில் இன்று ஈழத்தமிழருடைய விவகாரம் என்பது தேவையற்ற ஒன்றாக மாறியிருக்கிறது.

இலங்கையில் அல்லது தென்னாசிய கண்டத்தில் சீனாவின் ஆதிக்கத்தை சமாளிப்பதற்கு அல்லது தடுப்பதற்கு இந்தியாவுக்கு தற்பொழுது அவசியமானது சுற்றியுள்ள நாடுகளுடன் நட்பு பாராட்டுவது மாத்திரமே.அந்த அடிப்படையில் இந்தியாவுக்கு எதிராக இதுவரை பல போராட்டங்களையும் அவமதிப்புகளையும் செய்துவந்த ஜே.வி.பி.ஆட்சி பீடம் ஏறியவுடன் அவர்களை நட்பு பாராட்ட வேண்டிய கட்டத்துக்கு இந்தியா சென்றிருக்கிறது என்றால் இந்தியாவின் கொதிநிலை எந்த மட்டத்தில் இருக்கிறது என்பதை அறிவது கடினமானதல்ல.

ஆகவே,புதுடில்லியிடம் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றத்தில் தமிழர்கள் எவ்வாறு இந்தியாவை தம் பக்கம் இழுக்கப்போகிறார்கள் என்பதிலேயே எதிர்கால நலன்கள் தங்கியிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவுடனான ஈழத்தமிழரின் உறவு அவ்வளவு சரியில்லை என்பதை பல அரசியல் அவதானிகள் எச்சரித்து வந்திருக்கிறார்கள். குறிப்பாக ஈழத்தில் தமிழர்களை ஆளும் தலைவர்கள் என்று கூறிக்கொள்வோர் விட்ட தவறுகளே இந்த நிலைமைக்கு காரணம் என பல தடவைகள் எச்சரிக்கப்பட்டு வந்திருக்கிறது.ஆகவே எமது கொள்கைகளில் நாங்கள் மாறுவது அவசியமாகும். குறிப்பாக ஒற்றுமை என்ற ஒரு குடையின் கீழ் தமிழ் தலைமைகள் ஒன்று சேர்வது அவசியமாகும். இதனை பல தடவைகள் இந்தியா கூட வலியுறுத்தியிருக்கிறது.ஆனால்,எமது தலைவர்கள் அதனை காதில் கூட வாங்கிக்கொள்ளாமல் தங்களுடைய சுயநல அரசியல் போக்கில் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.அதுதான் ஈழத்தமிழரின் அரசியல் போக்கு பின்சென்றதற்கு பிரதான காரணமாகும்.ஆகவே தமிழ் தலைமைகளிடத்திலும் தமிழ் மக்களிடத்திலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.அந்த மாற்றத்தினூடாகவே இந்தியாவையும் எங்கள் பக்கம் திருப்ப முடியும்.சர்வதேசத்தையும் எண்கள் பக்கம் திருப்ப முடியும்.ஆகவே மாற்றம் என்ற விடயம் ஈழத்தமிழர் தேசத்திலிருந்து உருவாகுவதே காலத்தின் தேவையாகும். ■




அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)

INDIEN in HEILBRONN யாழ் Festival

**யேர்மனியில் கைல்புறோன் நகரில் மாபெரும் கொண்டாட்டம்**

Theresienwiese
74072 Heilbronn

# யாழ் எழில் கொண்டாட்டம்!

**29.05.2025 முதல் 01.06.2025 வரை**

**FREE ENTRY**

திறந்த வெளி அரங்கில் அனுமதி இலவசம்

HKB











புத்தெழில், புதுப்பொலிவுடன் தெரேசியன் திடல் எங்கும்
திரண்டெழும் மக்கள் கடல்

ஆம்... இரண்டாவது முறையாக
கைல்புறோன் இந்து கலாச்சார கல்வி மன்றம்
பெருமையுடன் வழங்கும்

# யாழ் எழில் கொண்டாட்டம்!

**இம்முறை நான்கு நாட்கள் தொடரச்சியாக**
**29.05.2025 தொடக்கம் 01.06.2025 வரையில்**

**காதுக்குச் சுவை சேர்க்கும் இசை விருந்துகளுடன்**
**நாவுக்குச் சுவை சேர்க்கும் இலங்கை - இந்தியச் சைவ உணவுகள் மற்றும்**

சாஸ்திரிய, திரையிசை நடனங்கள் மற்றும்
இசைக் கச்சேரிகளுடன் DJ இசையும்

இம்முறை எமது பிராந்தியத்தில் முதன் முறையாக காவியக் காதல் சொல்லும்
*காத்தவராயன் சிந்து நடைக் கூத்து* **29.05.2025**

தையல் ஆரியமாலையிடம் மையல் கொண்ட காரணத்தால்
மாரிமைந்தன் காத்தவராயன் கழுமரத்தில் வாடி நின்றான்!
கழுமரம் அவனைக் காவு கொண்டதா இல்லை மாரி அம்மன்
தன்மகனைக் காத்துக் கொண்டாளா..? என்பதைக் காணத் தவறாதீர்கள்.

*அலை எனத் திரண்டு வாரீர்*
*அறுசுவையுடன் ஆனந்தக்*
*கேளிக்கை பாரீர்.*

இந்து கலாச்சார கல்வி மன்றம்

Hindu Kultur- und
Bildungszentrum e.V.
01727733873
www.hkb-verein.de
Ajantha Kasipathy Iyer

# என்னோட விருமாண்டி இங்கேதான் இருக்காரு என்ற அன்னலட்சுமி!

தக் லைஃப் படத்தின் முதல் பாடலான “ஜிங்குச்சா“ பாடல் 18.04.2025 சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் வெளியானது. இயக்குநர் மணிரத்னம், ஏ.ஆர். ரஹ்மான், கமல்ஹாசன், சிம்பு, த்ரிஷா, அபிராமி, உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

அழகாய் ஜொலித்த அன்னலட்சுமி: விருமாண்டி படத்தில் அன்னலட்சுமியாக நடித்திருந்த அபிராமியை பார்த்தது ரசிகர்கள் அனைவரும் விருமாண்டி அன்னலட்சுமி என கத்த தொடங்கினர். அப்போது அழகாய் ஜொலித்த அபிராமி,



என்னோட விருமாண்டி இங்கேதான் இருக்காரு என தெரிவித்ததும் கமலின் முகம் புன்னகையில் மலர்ந்தது. மேலும், அரங்கமே அதிர ரசிகர்கள் கைதட்டினர். பின்னர் பேசிய அபிராமி, இங்கிலீஸ்ல பேச சொன்னாங்க. தமிழ்நாட்டுக்கு வந்துட்டு தமிழ் ஆடியன்ஸ் முன்னாடி எப்படி ஆங்கிலத்தில் பேச முடியும் என்றார். நிஜமாவே கை நடுங்குது என்ன சொல்றதுன்னு தெரியலை. நான் பார்த்து வளர்ந்த ஜாம்பவான்கள் முன்னாடி நான் நிற்கிறேன். நான் 11 வயதில் நடிக்க வந்தேன். நிஜமாக என் கனவு நிறைவேறியிப்பதை உணர்கிறேன் என அபிராமி தெரிவித்தார்.

# மாதவன்- நயன்தாரா நெஞ்சுல

## படுத்துக்கொண்ட காட்சி நெஞ்சைத் தொட்டது



பதும், மாதவனை நயன்தாரா போட்டு அடிப்பதுமென இருவருக்கும் சம மான வாக்குவாதங்கள் மற்றும் அடிதடி காட்சிகள் கொடுக்கப்பட்டாலும், அதையும் தாண்டி மாதவனை காதலுடன் நயன்தாரா கட்டிப்பிடிப்பதும், அந்த நைட் பிரியாணி மேட்டரும், மாதவன் நெஞ்சின் மேல் நயன்தாரா படுத்திருக்கும் அந்த சீனும் ரசிகர்களை ரொம்பவே டச் செய்துவிட்டது. இருவரும் சேர்ந்து இன்னும் சில படங்களிலும் நடிக்க வேண்டும் என்றும் ரசிகர்கள் கோரிக்கை வைக்க ஆரம்பித்து விட்டனர்.

**மாதவன் - நயன்தாரா கெமிஸ்ட்ரி:** இதற்குமுன் மாதவன் மற்றும் நயன்தாரா இணைந்து எந்தவொரு படத்திலும் நடிக்கவில்லை. இத்தனை ஆண்டுகளில் எப்படி இப்படியொரு ஜோடி மிஸ் ஆனது என ரசிகர்கள் வியக்கும் அளவுக்கு டெஸ்ட் படத்திலும் இருவரது கெமிஸ்ட்ரி ரசிகர்களை அந்தளவுக்கு ஈர்த்துள்ளது. விக்ரம் வேதா படத்தில் ஷ்ரத்தா ஸ்ரீநாத் – மாதவன் கெமிஸ்ட்ரிக்கு பிறகு மாதவனுக்கு சரியான ஜோடியாக டெஸ்ட் படத்தில் நயன்தாரா நடித்திருக்கிறார் என்கின்றனர்.

**நெஞ்சுல படுத்துக்கொண்டு:** நயன்தாராவை மாதவன் போட்டு அடிப்

# அஜித்தின் அடுத்த இயக்குநர்



அஜித் நடித்து அண்மையில் வெளிவந்த ““குட் பேட் அக்லி““படத்தைத் தெலுங்கு தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்தது. இந்நிலையில் தனது அடுத்த படத்தை இயக்கும் வாய்ப்பை ஆதிக் ரவிச்சந்திரனுக்கே அஜித் கொடுத்துள்ளார் என்று சொல்லப்படுகிறது.

அந்தப் படத்தை மைத்ரி நிறுவனமே தயாரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள். இதற்கிடையில் அந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பை தெலுங்கு இயக்குநர் ஒருவருக்குத் தரலாம் என்றும் அந்த நிறுவனம் விரும்புகிறதாம்.

பொதுவாக ஒரு இயக்குநர் அல்லது ஒரு தயாரிப்பு நிறுவனம் தனக்குப் பிடித்துவிட்டால் அவர்களுடன் அடுத்தடுத்து படங்கள் செய்வார் .

# சுந்தர் சி இயக்கத்தில் கார்த்தி

சுந்தர் சி இயக்கும் அடு த்த படத்தில் கார்த்தி நடிக்க இருப்பதாகவும், இந்த படத்தின் படப்பிடிப்பு இவ்வருட இறுதியில், அதாவது நவம்பர் மாதம் தொடங்கும் என்றும் கூறப்படுகிறது.மேலும், இந்த படத்தை கார்த்தியின் பல படங்களை தயாரித்த பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.அது மட்டும் இன்றி, பையா மற்றும் தோழா படங்களுக்கு பிறகு, நீண்ட இடைவேளைக்கு பின்னர் மீண்டும் கார்த்தி ஜோடியாக தமன்னா நடிக்க இருப்பதாகவும், இது குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், விரைவில் இந்த படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.



# சிம்புவுடன் சந்தானம் நடிக்க 7 கோடி



சிம்பு நடிக்க இருக்கும் 49 ஆவது திரைப்படத்தை பார்க்கிங் இயக்குனர் ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்க இருப்ப தாக சமீப த்தில் அறிவிக்கப் பட்டது.இந்த நிலையில், இந்த படத்தின் ஆரம்பக் கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், விரைவில் படப்பிடிப்பு தொடங்கும் என்றும், இந்த படத்தின் நாயகிகளாக மமீதா பாஜு மற்றும் காயடு லோஹர் நடிக்க இருப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில், இந்த படத்தில் சந்தானம் ஒரு முக்கியக் வேடத்தில் நடிக்கவிருப்பதாக ஏற்கனவே கூறப்பட்ட நிலையில், தற்போது இந்த படத்தில் நடிக்க அவருக்கு 7 கோடி ரூபா சம்பளம் என்று கூறப்படுகிறது.







அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)
















அனைவருக்கும் எமது தொழிலாளர் தின வாழ்த்துகள் (May 1)